

கல்கி



KI மே 10, 1943 4 அன

வால்கார்ட் பிரதர்ஸாரின் துவிபாஷியாயிருந்தவரும் காலஞ்சென்ற பி. திருவேங்கட முதலியாரின் மூத்த குமாரருமான பி. ஜெயராம முதலியார் 29-4-43 அன்று காலை 6-30 மணிக்கு. பூந்தமல்லி ஹைரோடில் 212 நெ. "பெவிலிடி" என்ற தமது இல்லத்தில் காலமானார். அவருக்கு வயது 33. 30-4-43 அன்று தஹன ஸம்ஸ்காரம் நடந்தது. அவர் தமது மனைவியையும் மூன்று சகோதரிகளையும், இரண்டு சகோதரர்களையும் அருமை அன்னையையும் சோகத்திலாழ்த்தி மறைந்தார்.




உண்மையான தேயிலை குறிப்புகள்
இந்தியாவில் 37 ராம்பூர்கள்
இந்தியாவில் 37 ராம்பூர்கள் இருக்கின்றன. ப்ருக்பாண்டு வர்த்தகர்கள் அங்குள்ள எல்லாக்கடைகளிலும் தூய்தான தேயிலை கிடைப்பதை நிச்சயிக்க அடிக்கடி ஒவ்வொரு ஊருக்கும் போய்வருகிறார்கள்.
ஒரு நாளில் 26,384 கடைகளுக்கு விஜயம்
ப்ருக் பாண்டு வர்தகர்கள் ஒரு நாளில் இந்தியா பூராகவும் 26,384 கடைகளுக்கு விஜயம் செய்கிறார்கள்.
வாரத்தில் மூன்று பூப்பிரதக்ஷிணம்
இந்தியா பூராகவும் எப்பொழுதும் தூய்தான தேயிலை கிடைப்பதை உறுதி செய்ய ப்ருக் பாண்டு வர்தகர்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஒரு வாரத்தில் 84,000 மைல் (அதாவது மூன்று மடங்கிற்கு மேல் உலகத்தின் சுற்றளவு) பிரயாணம் செய்து சிறு வியாபாரி முதல் பெரிய வியாபாரி வரையில் எல்லோரையும் பார்த்து வருகிறார்கள்.
தேநீர் தயாரிக்கும் குருடன்
திருவாங்கூரில் பிரயாணம் செய்யும் எங்கள் வர்த்தகர், அங்கு ஒரு ஊரில் ஒரு வியாபாரி ஒரு கண்ணில்லா வேலைக்காரனை அவருடைய தேநீர் தயாரிக்கும் திறமைக்காக வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கிறார். அந்த வியாபாரியின் உயர்ந்த உருசிக்கும் தன்மைக்குத் தகுந்தபடி முதல்தர தேநீர் அந்தக் குருடன் தயாரிக்கிறானாம். தூய்தான தேயிலை எப்பொழுதும் ப்ருக் பாண்டு வர்த்தகரிடம் கிடைக்கும் என்பது அவருக்கு நிச்சயமாய் தெரியும்.
ப்ருக் பாண்டு

கல்கி

பொருளடக்கம்

மலர் 2
இதழ் 29

1943 மே 10

சுபானு௵ சித்திரை மீ 27உ.

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்கள்.



★ உலகத்திலுள்ள நூலாசிரியர்களுக்கெல்லாம் நாக்கில் ஜலம் ஊறும்படியான ஒரு செய்தி சில நாளைக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து வந்தது. அங்கே ஒருவர் ஒரு புத்தகம் போட்டாராம். போட்ட மூன்று வாரங்களில் ஐந்து லட்சம் பிரதிகள் விற்பனை யாயினவாம்! அந்த அதிசய ஆசிரியரின் பெயர் வெண்டல் வில்கி. சென்ற அமெரிக்கத் தேர்தலில் பிரஸிடெண்ட் ஸ்தானத்துக்கு ஸ்ரீ ரூஸ்வெல்ட்டுடன் போட்டி யிட்டவர். ஸ்ரீ வில்கி அப்படி அந்தப் புத்தகத்தில் எழுதியிருப்பதுதான் என்னவென்றால், சமீபத்தில் அவர் செய்த உலகப் பிரயாணத்தின் வரலாறு தான். வில்கி தமது பிரயாணத்தில் இந்தியாவுக்கு வரா விட்டாலும், எகிப்திலிருந்து அலாஸ்கா வரையில் அவரை அநேகர், "இந்தியா விஷயம் என்ன?" என்று கேட்டுக் கொண்டிருந்தார்களாம். இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை வில்கி மேற்படி புத்தகத்தில் பலமாக ஆதரிக்கிறாராம். ஆமாம்; வில்கி இவ்வளவு சரியான அபிப்பிராயம் கொண்டிருப்பதின் காரணம் என்னவா யிருக்கலாம்? — ஒருவேளை, "கல்கி"க்குப் பிராஸமாய் "வில்கி" என்ற பெயர் அமைந்திருப்பதுதானோ!

★ ஒப்பற்ற ★ 4 ★ நக்ஷத்திரங்கள் ★

★

பக்தி

★

காரைக்கால் அம்மையார்

●

மாயவரம் பாப்பா
காமடியன்
சாரங்கபாணி
காளி N. ரத்னம்
K. R. செல்லம்
முதலியோர்
நடித்தது

★

கற்பு

★

உத்தம பத்தினி
யின் ஒப்பற்ற
சரிதம்

★

சுமதி

தெலுங்கு

சினிமா ராணி
பசுபுலேடி
கண்ணாம்பா
நடித்தது

★

அன்பு

★

தெய்விகம்

★

புலமை

★

மகிமை

இவைகள் நிறைந்த
வாஹினியின்

பக்த போதனா

தெலுங்கு

நாகையா
மாலதி
வனஜா
முதலியோர்
நடித்தது

★

நீதி

★

ஆராய்ச்சி மணி

அல்லது
மனுநீதிச்
சோழன்

●

P. B. ரங்காச்சாரி
M. R. சந்தான
லக்ஷ்மி
N. S. கிருஷ்ணன்
T. A. மதுரம்
முதலியோர்
நடித்தது

★

திரையிடத் தயார்!

கந்தன் & கம்பெனி :: கோவை

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்

என்ன சேதி?

சென்னைத் தேர்தல்

சென்ற இதழில் இந்திய சட்ட சபைக்கு ஸ்ரீ எஸ். பார்த்தசாரதியின் பெயரை நாம் சிபார்சு செய்தபோது, காங்கிரஸின் பெயரால் ஒரு அபேட்சகர் நிறுத்தப்படுவார் என்று எதிர்பார்க்கவில்லை. ஸ்ரீ எஸ். பார்த்தசாரதியும் அதை எதிர்பார்க்கவில்லையென்று இப்போது தெரிகிறது. காங்கிரஸின் பெயரைச் சரியாகவோ தவருகவோ சொல்லிக்கொண்டு நிற்கும் அபேட்சகரைத் தாம் எதிர்க்கக்கூடாது என்ற எண்ணத்துடனேயே அவர் போட்டியிலிருந்து விலகிக் கொண்டிருக்கிருர். அவருடைய இந்தப் பெருந்தன்மையான தீரச் செயலிலிருந்தே, சென்னைக்கு அவர் எவ்வளவு நல்ல பிரதிநிதியாயிருந்திருக்கக் கூடும் என்பது தெளிவாகிறது. ஸ்ரீ எஸ். பார்த்தசாரதியுடனே கூட இன்னும் பல அபேட்சகர்களும் விலகிக் கொண்டு விட்டார்கள்.

ஆகவே காங்கிரஸின் பெயராலும், ஜஸ்டிஸ் கட்சியின் பெயராலும் நிற்பவர்கள்தான் பாக்கி நிற்கிருர்கள்.

தற்போதைய தேச நிலைமையில் காங்கிரஸின் பெயரால் ஒரு அபேட்சகரை நிறுத்துவது உசிதமல்லவென்று சென்னை நகரின் பிரபல காங்கிரஸ்வாதிகள் பலர் அபிப்பிராயப்பட்டார்கள். இதே அபிப்பிராயத்தை அனுசரித்துத்தான் தஞ்சை — திருச்சி உப தேர்தலிலும் காங்கிரஸ் அபேட்சகர் நிறுத்தப் படாமல், காங்கிரஸைத் தாங்கி நிற்கக் கூடிய ஒருவர் நிறுத்தப்பட்டார்.

இப்படிப் பிரபல காங்கிரஸ் தலைவர்களின் அபிப்பிராயத்துக்கு மாருகச் சென்னை நகருக்குக் காங்கிரஸ் அபேட்சகரை நிறுத்தியவர்கள், அந்தப் பொறுப்பைப் பூரணமாய் நிறைவேற்றுபவர்களாக. காங்கிரஸ் அபேட்சகர் ஸ்ரீ ஜி. ரங்கைய நாயுடு பெருமித வெற்றியடையச் செய்ய வேண்டியது அவர்களுடைய கடமையாகும். இந்தக் கடமையை அவர்கள் சரிவர நிறைவேற்ருவிடில் பெரும் அபகீர்த்திக்கு உள்ளாக நேரிடும்.

சிவபதம் அடைந்தார்

உலகத்தில் பெரும்பாலானவர்கள் "பணம்" "பணம்" என்றுதான் அலைகிருர்கள். அவர்களில் பணம் சேர்ப்பவர்கள் வெகு சிலரே. அவர்களிலும் வெகு சிலர், சேர்த்த பணத்தைத் தகுந்த தர்ம காரியங்களுக்குச் செலவிட்டு, பணம் படைத்ததின் உண்மைப் பயனை அடைகிருர்கள். இத்தகைய பாக்கியசாலிகளில் ஒருவர் நேமத்தான்பட்டி ஸ்ரீ சி. வி. கா. பழனியப்பச் செட்டியார் அவர்கள். இந்தப் பெரியார் செய்திருக்கும் எத்தனையோ அரிய தர்மங்களில் முக்கியமானவை, நேமத்தான்பட்டியில் ரூ. 30,000 செலவில் விசாலாக்ஷி ஊருணி எடுத்ததும், அவ்வூரில்



திருநாவுக்கரசு வித்தியாசாலை நிறுவியதுமாகும். இவ் வித்தியாசாலை மிகவும் முன்னேற்றமான முறையில் நடத்தப்பட்டு வருவது பிரசித்தமானது. இத்தகைய தர்மவான்—சிவபக்தர்—"சிவ" நாமத்தை உச்சரித்துக் கொண்டே சிவபதம் எய்தினர் என்று அறிகிரும். அவருடைய புதல்வர்களும், சிறந்த தமிழன்பர்களுமான ஸ்ரீ பழ. நாராயணன் செட்டியார், ஸ்ரீ பழ. கிருஷ்ணன் செட்டியார் இவர்களுக்கு நமது மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிரும்.

ஐந்து ரூபாய் பரிசு : சென்ற இதழ்க் காலக்ஷேபக் …

நிகழ்ச்சிச் சித்திரம் - " அப்படிச் சொல்லும் !"   உம்மன்




உச்சச் சோ! அப்படியா?
அவசரச்சட்டம் போட்டு அந்தத் தீர்ப்பை அடித்துத் தள்ளி விட்டேன்!
அப்படிச் சொல்லும்! அது தானே பார்த்தேன்!
காரர்களும், அமெரிக்க நிருபர்களும் இருக்கிறார்களே இவர்கள் வாயை மூடிக் கொண்டு இருந்தால் தானே?
அடடா! அது பெரிய தொல்லை தான்.
ஆனாலும் பரவாயில்லே. இந்த ஸி.ஆர். இருக்கிறாரே, அவருக்கு உடம்பு சரியில்லையாம்.
பலே பேஷ்! அப்படியானால் குஷிதான்!
இல்லே, குஷி இல்லே! ஆசாமி எழுந்திருந்து விட்டாராம். திரும்பவும் கம்ப மண்டையை உருட்டப் போகிறாரோ, என்னவோ?

"சாம்ராஜ்ய விநாசம்!"

சூரியன் அஸ்தமிக்கத் துணியாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வீர சூரப் பிரதம மந்திரி சர்ச்சில் துரை தூக்கத்திலிருந்து கண் விழித்தெழுந்ததும் எதிரிலிருந்த நிலைக் கண்ணாடியில் தம்மைத் தாமே பார்த்துக் கொண்டார். உடனே, அவருக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. "நாம் கடவுளா? அல்லது கடவுளின் பிரதிநிதிதானா?" என்பதுதான் சந்தேகம். ஒன்பது சுருட்டுக்களை நாசம் செய்து யோசித்தும் மேற்படி சந்தேகம் தீராதபடியால், சர்ச்சில் துரை எழுந்திருந்து காலைப் போஜனாதிகளை முடித்துக் கொண்டு வந்து சாம்ராஜ்ய சபா மண்டபத்தில் அமர்ந்தார். சாம்ராஜ்யத்தின் பல பாகங்களிலிருந்தும் அன்று சில விசேஷச் செய்திகள் வந்திருந்தன. அவையெல்லாம் பிரதம மந்திரிக்கு ஒவ்வொன்றாகத் தெரிவிக்கப்பட்டன.

"பிரபு! நம் சாம்ராஜ்யத்தில் இருநூறு வருஷமாக நடக்காத அதிசயம் நடந்துவிட்டது. சூரியன் அஸ்தமித்து விட்டது!" என்றார் அன்னிய நாட்டு மந்திரி.

"என்ன? என்ன? அப்படியா சேதி? சூரியனுக்குப் புத்தி கற்பிக்க ஒரு 50,000 டன் யுத்தக் கப்பலை உடனே அனுப்பும்" என்றார் சர்ச்சில், யுத்த மந்திரியிடம்.

"கானடா தேசம், அமெரிக்கக் குடியரசுடன் ஐக்யமாகி விட்டது" என்றார் குடியேற்றநாட்டு மந்திரி.

"இவ்வளவுதானே? அமெரிக்காவையே நம் சாம்ராஜ்யத்திற்குள் கொண்டு வந்தால் போகிறது!" என்றார் சர்ச்சில்.

"ஆஸ்திரேலியா கண்டத்தை நேற்று முதல் திடீரென்று காணோம். ஆஸ்திரேலியா இருந்த இடத்தில் வேறு ஏதோ பெயர் கொண்ட தேசம் இருக்கிறதாம்!"

"ஆஸ்திரேலியா எங்கே என்று நமது துப்பறியும் புலிகளை விட்டுக் கண்டு பிடிக்கச் சொல்லும்!"

"ஏடன் துறைமுகம் அதன் இருப்பிடத்தை விட்டுக் கிளம்பி மாஸ்கோவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறதாம்!"

"இவ்வளவுதானே? ஏடனை உடனே திருப்பி அனுப்பும்படி ஸ்டாலினுக்கு எழுதினால் போகிறது!"

"எல்லாவற்றையும் விடப் பெரிய பயங்கரமான சேதி ஒன்று வந்திருக்கிறது. இந்தியா சுயாதீனம் அடைந்து விட்டதாம்!"

"என்ன? என்ன? நிஜமாகவா? யார் கொடுத்தார்கள் என்னைக் கேட்காமல்? எங்கே அந்தச் சண்டாளர்கள்?"

"ஒருவரும் கொடுக்கவில்லை. இந்தியாவே சுதந்திரத்தை ஸ்தாபித்துக் கொண்டு விட்டதாம்."

"ஐயையோ! இந்தக் கண்ராவியைப் பார்க்கவா நான் இருக்கிறேன்? இப்பேர்ப்பட்ட துக்கச் செய்தியைக் கேட்கவா நான் பிரதம மந்திரியாயிருக்கிறேன்! முடியாது முடியாது! இந்தாருங்கள் ராஜிநாமா!"

"கூடாது கூடாது!" என்ற கூக்குரல் நாலுபுறமும் எழுந்தது.

அச் சமயத்தில் ஒரு தூதன் ஓடி வந்து, "சனிக்கிரஹமானது நிலை பெயர்ந்து விநாடிக்கு ஒன்பது கோடி மைல் வேகத்தில் இங்கிலாந்தை நோக்கி வருகிறதாம்!" என்று தெரிவிக்கவே, எல்லா மந்திரிகளும் "ஐயோ! ஐயோ!" என்று கதறிக் கொண்டு நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்.

* * *

மேற்கண்ட விதமாகச் சர்ச்சில் துரையின் காலத்திலேயே கட்டாயம் நடக்கப் போகிறதென்று "நியூயார்க் டெய்லி நியூஸ்" என்னும் அமெரிக்கப் பத்திரிகை எழுதியிருக்கிறதாம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் கட்டாயம் சிதைந்து சிதறிப் போகுமென்றும், அப்போது ஒருவேளை சர்ச்சில் பிரதம மந்திரியாயிருக்கமாட்டாரென்றும், ஆனால் அவர் உயிரோடிருப்பாரென்றும் மேற்படி பத்திரிகை ஜோசியம் சொல்லுகிறது.

சாம்ராஜ்ய நாசத்துக்கு அப் பத்திரிகை சில காரணங்களையும் சொல்லி வைத்திருக்கிறது. அந்த நாளில் உலகம் முழுவதிலும் பிரிட்டிஷ் கப்பல்களுக்கு நிலக்கரி போட்டுக் கொள்ள வசதியிருந்தபடியால் சாம்ராஜ்யத்தை நிலைநாட்டிக் கொள்ள முடிந்ததாம். இப்போது கப்பல்கள் எண்ணெயைக் கொண்டு ஓடுவதால், அந்த வசதி பய

னற்றதாகி விட்டதாம். — இம்மாதிரி அர்த்தப் பிசகு'க் காரணங்களை அப் பத்திரிகை சொல்கிறது.

மேற்படி அமெரிக்கப் பத்திரிகையின் அபிப்பிராயப்படி பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சிதைந்து போவதாயிருந்தால், அதற்குக் காரணம் எண்ணெயுமல்ல— பிண்ணாக்கு மல்ல — வேறு எந்த இயற்கை விபரீதமுமல்ல என்று நாம் கூறுகிறோம். அதற்கு ஒரே ஒரு காரணந்தான் இருக்க முடியும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஆளுகிற வர்களின் விபரீத மடத்தனந்தான் அந்தக் காரணமாகும்.

இன்றைரு சர்ச்சில் தர்பாரைக் கற்பனை செய்து பார்க்கலாம் :—

பிரதம மந்திரியும் யுத்த மந்திரியு மான சர்ச்சில் கொலு விற்றிருக்கிறார். அப்போது பல இலாகா மந்திரிகள் வந்து ரிபோர்ட் செய்கிறார்கள்.

"ஆகாச விமான உற்பத்தி ரொம்பவும் குறைந்து விட்டது. மாதம் ஆயிரத்திலிருந்து மாதம் இருநூறுக்கு வந்துவிட்டது."

"அதைப் பற்றி யுத்தம் முடிந்த பிறகு பார்க்கலாம். இப்போது அவகாசமில்லை."

"கப்பல் கட்டும் தொழிற்சாலைகளில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள்."

"வேலை நிறுத்தத்தைப் பற்றிக் கவனிக்க இதுதானா சமயம்? முதலில், யுத்தம் முடியட்டும்!"

"ஆப்பிரிக்காவிலுள்ள நமது துருப்புகளுக்குப் போதிய சாப்பாடு போய்ச் சேரவில்லை. கொஞ்ச நாளாய் அவர்கள் தினம் ஒரு வேளைதான் சாப்பிடுகிறார்களாம்."

"யுத்தம் முடிந்த பிறகு மூன்று வேளை சாப்பிடட்டுமே? இப்போது தானா சாப்பாட்டுக்கு அவசரம்?"

"லண்டன் கடையில் ஒரு சுருட்டுக் கூடக் கிடையாது ......"

"ஆகா! அது கவனிக்க வேண்டிய விஷயந்தான். உடனே, சுருட்டு இறக்குமதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்."

சர்ச்சில் மேற்கண்ட விதம் தர்பார் நடத்தினாரானால், நாம் என்ன செய்வோம்? அவருக்கு ஏதோ மூளைக் கோளாறு ஏற்பட்டு விட்டது — யுத்தத்தை நடத்த இனி அவர் தகுதியில்லை — என்றுதான் சொல்வோம். கிட்டத்தட்ட அதே மாதிரியான ஒரு காரியத்தை அவர் இப்போது செய்து கொண்டிருக்கிறார் என்பதை வருத்தத்துடன் நாம் தெரியப்படுத்த வேண்டியிருக்கிறது. "இந்தியா விஷயத்தை யுத்தம் முடிந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்வது அத்தகைய மடத்தனமான காரியந்தான்.

ஏனெனில், இந்தியாவின் அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதே யுத்தம் ஜயத்துடன் சீக்கிரத்தில் முடிவதற்கு ஒரு பெரிய சாதனமாகும்.

இந்தியா விஷயத்தைத் தள்ளிப் போடுவதற்கு யுத்தத்தைக் காரணமாகச் சொல்வது எவ்வளவு அர்த்தமற்றது — அநீதியானது —என்பதற்கு ஒரு நல்ல உதாரணம் சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறது. போலந்தின் சுதந்திரப் பிரச்னைதான் அந்த உதாரணம்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அழிவைப்பற்றி அமெரிக்கப் பத்திரிகை சொல்கிறதே, அம்மாதிரி இரண்டு வருஷத்துக்கு முன்பே நடந்திருக்கக்கூடும். அப்படி நடக்காமல் தடுத்தது யார் என்று சொல்ல வேண்டியதில்லை. வீர ருஷியர்கள்தான். இப்போதும் அந்த வீர ருஷியர்கள்தான் மகத்தான கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு யுத்தத்தை நடத்தி வருகிறார்கள். நேசக் கட்சியின் சம்பூரண வெற்றி ருஷியாவின் எதிர்ப்புச் சக்தியையே பொறுத்திருக்கிறது என்று சொல்வது மிகையாகாது.

இப்பேர்ப்பட்ட மகத்தான போரை ருஷியா நடத்திக் கொண்டிருக்கும் சமயத்தில் இங்கிலாந்தில் வந்து பத்திரமாய் உட்கார்ந்து கொண்டிருக்கும் போலந்துக்காரர்கள் என்ன செய்கிறார்கள்? "யுத்தம் இருக்கட்டும்; போலந்தின் சுதந்திரம் என்ன ஆகிறது?" என்று கேட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். அதாவது, "ஸ்டாலின் ஜெர்மனியை முறியடித்த பிறகு போலந்தை முழுசாகப் பழைய போலிஷ் மந்திரிகளிடம் ஒப்புவித்து விடுவாரா?—அப்படி ஒப்புவிக்கா விட்டால் என்ன செய்கிறது?—இதையெல்லாம் இப்போதே அறுத்துப் பேசிவிட வேண்டும்" என்கிறார்கள். இதற்காக இங்கிலாந்திலேயே அவர்கள் பத்திரிகை நடத்திக் கிளர்ச்சி செய்கிறார்கள். இந்தக் கிளர்ச்சிக்குச் சாதகமாக, கெபல்ஸின் பொய் மூட்டையைக் கூட அவர்கள் பயன் படுத்திக் கொண்டார்கள்!

இவர்களுடைய சுதந்திரக் கிளர்ச்சியினால் யுத்த முயற்சிகள் தடைப்படாதா? தடைப்படுமென்றால், இதை

யெல்லாம் இங்கிலாந்திலிருந்து நடத்துவதற்குச் சர்ச்சில் ஏன் இடங்கொடுக்கிருர்? ஏன் போலிஷ் பத்திரிகைகளை அடக்கவில்லை? ஏன் அந்தப் போலிஷ் கிளர்ச்சிக்காரர்களை பிரிட்டிஷ் சிறையில் போடவில்லை?

இந்தியாவின் சுதந்திரப் பேச்சு மட்டுந்தானு யுத்த முயற்சியைத் தடைப்படுத்தும்? எவ்விதத்தில் தடைப்படுத்தும்? இந்தியாவின் சுதந்திரப் பிரச்னை தீர்ந்தால் இன்னும் தீவிரமாக அல்லவா எல்லா யுத்த முயற்சிகளும் நடைபெறும்?

* * *

மேற்படி போலந்து சுதந்திரக் கிளர்ச்சி விஷயத்தில் ஸ்டாலின் என்ன முறையை அனுஷ்டிக்கிருர் என்று பார்ப்போம். லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் மாஸ்கோ நிருபர், ஸ்டாலினுக்குப் போலந்து கிளர்ச்சியைப் பற்றி இரண்டு கேள்விகளை அனுப்பினுர்.

(1) யுத்தத்துக்குப் பிறகு போலந்தின் அரசியல் நிலைமையைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

(2) ருஷ்யாவுக்கும் போலந்துக்கும் இருக்க வேண்டிய சம்பந்தத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ஸ்டாலின் மேற்படி கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயங்கிஞரா? மென்று முழுங்கிஞரா? "யுத்தத்துக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்; இப்போது என்ன அவசரம்?" என்ருரா? "கேவலம் ஒரு பத்திரிகை நிருபர் கேட்பது, நான் பதில் சொல்வதா?" என்று வீருப்புப் பண்ணிஞரா?—இதெல்லாம் ஒன்றுமில்லை. பளிச் சென்று இரண்டு கேள்விகளுக்கும் பதில் எழுதியனுப்பினுர்:—

(1) யுத்தத்திற்குப் பிறகு போலந்து பூரண சுதந்திரத்துடன் இருக்க வேண்டும்.

(2) பொது விரோதியான ஜெர்மனிக்கு எதிராகப் போலந்துக்கும் ருஷ்யாவுக்கும் சிநேக உடன்படிக்கை ஏற்பட வேண்டும்.

விஷயம் எவ்வளவு தெளிவாகப் போய்விட்டது? இந்தியா விஷயத்தில் இவ்வளவு தெளிவான வாக்குறுதியைச் சர்ச்சில் ஏன் கொடுக்கவில்லை? ஏன் தலையைச் சுற்றி வளைத்து மூக்கு எட்டவில்லை என்று கையை விரிக்கிருர்கள்?

"யுத்தம் முடிந்ததும் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம்" என்ற பேச்சு ஏன் இன்னும் சர்ச்சில் வாயிலிருந்து வரவில்லை?

கொடுக்கும் உத்தேசம் இருந்தால் வந்திருக்கும்; உத்தேசம் இல்லாததால் வரவில்லை.

சர்ச்சிலின் மனப்பான்மையைத் தான் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் பிரதிபலிக்கிறது.

இந்திய அரசியல் பிரச்னை நல்லபடியாகத் தீர்வதை அவர்கள் விரும்பவில்லையென்பதற்கு மேலும் மேலும் அத்தாட்சிகள் கிடைத்த வண்ணமிருக்கின்றன.

மகாத்மா காந்தி பிரிட்டிஷ் சர்க்காருடன் ராஜி பேசத் தயாராயிருந்த போது அவரையும் காங்கிரஸ் தலைவர்களையும் சிறையில் அடைத்தார்கள்.

பிறகு, சமரசம் ஏற்படுத்துவதற்காகப் பிரபல தலைவர்கள் தொடங்கிய முயற்சிகளையெல்லாம் கெடுத்து வந்தார்கள்.

மகாத்மாவைப் பேட்டி காண ராஜாஜி அநுமதி கேட்டார்; "இல்லை" என்ருர்கள். சர்வ கட்சி மகாநாட்டுத் தலைவர்கள் அநுமதி கேட்டனர்; அவர்களுக்கும் "இல்லை" என்ருர்கள்.

கடைசியாக, அமெரிக்கப் பிரஸிடெண்டின் சொந்தப் பிரதிநிதி பிலிப்ஸ் சிறையில் மகாத்மாவைப் பார்க்க அநுமதி கேட்டார்.

"பிலிப்ஸுக்கும் பெப்பே!" என்றது இந்திய அதிகாரவர்க்கம்.

"பெப்பே" சொல்வது சுலபம்; அதனுல் கடன் தீர்ந்து விடாது.

"பெப்பே" சொன்னவன் கடைசியில் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கே போகும்படி நேர்ந்து விடலாம்.

லண்டன் "டைம்ஸ்" நிருபரை விட, மிஸ்டர் பிலிப்ஸ் அந்தஸ்தில் குறைந்தவரா? பொறுப்பு உணர்ச்சி இல்லாதவரா? ஸ்டாலின் "டைம்ஸ்" நிருபரிடம் காட்டிய மரியாதைக்கும், பிரிட்டிஷ் சர்க்கார் பிலிப்ஸை நடத்திய முறைக்கும் எவ்வளவு வித்தியாசம்?

ஆமாம்; மேற்படி அமெரிக்கப் பத்திரிகை ஜோசியம் சொல்லுகிறபடி பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சிதைந்து நாசமாவதாயிருந்தால், அதற்குக் காரணம் இந்திய சுதந்திரக் கோரிக்கை சம்பந்தமாகக் கையாளப்படும் மடத்தனமான கொள்கையாகத்தானிருக்கும். இதற்கு மாருக, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு நல்ல காலமிருந்தால், பிரிட்டிஷ் மந்திரிகள் — அதிகாரிகள் மாற வேண்டும். அல்லது அவர்களுடைய மனப்பான்மையாவது மாறியாக வேண்டும்.

டி. கே. ஸி. ★★★

[சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்]

நெடுஞ்ச நாளாக ஸ்ரீ டி. கே. ிதம்பரநாத முதலியாரைச் சிலர் வெகு காபமாகத் தாக்கி வருகிறார்கள் ன்று தெரிகிறது. தமிழ் என்றால் ன்ன, கவிதை என்றால் என்ன என் தை எனக்கு ஒரளவு புகட்டிய பூசிரியரிடத்தில் எனக்கு வரம்பற்ற ன்பும் பட்சபாதமும் இருக்கத்தான் சய்யும். ஆகையால் நான் அவருக் ாகப் பரிந்து பேசினால் அதற்கு ஒரு வளை மதிப்பு இராது. ஆயினும் என் பச்சல்ல, — நானே ஒரு அத்தாட்சி ாவேன் — டி. கே. ஸி. யின் மிழ்ப் பணிக்கும், பெருமைக்கும். பச்சை விடப் பொருட்சான்றே வலிய ாகும். என்னைப் போன்ற ஒருவனை ங் கூடத் தமிழாசை கொள்ளச் செய் வர் டி. கே. ஸி. தான். இதை)ப்போது பலர் அறியச் சொல்லு றேன்; உபசாரமல்ல — உண்மை.

என்னைத் தள்ளுங்கள்: — தமிழ் ாட்டில் தமிழ்ப் பணிக்கு நல்ல விரச் ானை சேருமாறு இக்காலத்தில் ாக்கம் உண்டாக்கியவர் டி. கே. ஸி. ன்றே சொல்லுவேன். பலர் பல ரிய பணிகள் செய்திருக்கிறார்கள், சய்தும் வருகிறார்கள். ஆனால் . கே. ஸி. யின் தமிழ்ப்பணி ஒரு தனிச் றப்பு வாய்ந்தது. அதை வேறு யாரும் சய்ததில்லை. இதயத் தத்துவமும் விதையின் தனிப் பண்பும் அறிந்து பரும் பணி செய்பவர் டி. கே. ஸி.

மகனைப் பறி கொடுத்ததையும் உடல் நாயையும் ஆத்ம சக்தியைக் கொண்டு றந்து, துக்கங்களுக்கும் துன்பங்க க்கு மிடையில் யோகியைப்போல் ன்று தமிழ்ப் பணி செய்து வருகிறார். வர் மனது புண்படச் செய்வது வீரிய ல்ல; தமிழ்ப் பணியுமல்ல, சுத்த ழியாமை.

எந்த அபிப்பிராய பேதத்தைக் காண்டு அவர் இப்போது தாக்கப்படு றார்? டி. கே. ஸி. க்குக் கம்பர் எவ் தம் குற்றமும் குறையுமில்லாமல் ளங்கும் தெய்வீக அறிவும் உணர்ச்சி ம் சிருஷ்டி சக்தியும் கொண்ட ஒரு வியாவார். ஆகையால் அவருக்கு எது ழகாகத் தோன்றவில்லையோ, எது ரண ஒளியின்றி மங்கி விளங்கு றதோ, அதை அவர் கம்பர் எழுத் ல்ல என்று நீக்கிவிடுகிறார். அவசரத் தில் அல்ல, நிதானமாக ஆராய்ந்தே இவ்வாறு செய்யத் துணிகிறார். ஏட்டில் பக்தி வைக்காமல் தாம் கண்ட கம்பரின் மேல் அபார பக்தி வைத்துப் பாட்டு களைத் திரட்டுகிறார். இது இஷ்ட தேவதை பூசனைக் கிரமம். "அவரவர் தமதம தறிவறி வகைவகை" என்று ஆழ்வார் பாடிய முறையில் பக்தி யுடன் ஆராதிப்பவர் ஒருவரை யாரும் தாக்குதல் கூடாது.

அச்சியந்திரமும் காகித ஏடுகளும் இல்லாத பழைய காலத்தில் ஒரு பெரிய காவியம் எவ்வாறு மக்களிடை வழங்கி வந்தது என்பதை இந்தக் காலத்தில் கற்பனை செய்து கொள்ளு வது கஷ்டம். கற்பனை செய்து சாந்த மாக ஆராய்பவர்களுக்கு டி. கே. ஸி. சொல்லும் அபிப்பிராயங்களில் ஏதும் வியப்புத் தோன்றாது.

அபிப்பிராய பேத மிருந்தாலும் அது எவ்வளவில் நிற்கும்? டி. கே. ஸி. "இந்தப் பாட்டு அல்லது இந்த வரி அழகில் குறைந்திருக்கிறது. இதை நம் கம்பர் எழுதி யிருக்க மாட்டார்" என்கிறார். மற்றவர்கள், "இதையும் கம்பர் எழுதினார் என்றே எண்ண முடியும்; எப்போதும் ஒரே உன்னதப் படியில் நிற்க யாராலும் முடியுமா? சில சமயம் கம்பர் இத்தகைய பாடலும் பாடினார் என்று வைத்துக் கொள்வதில் கம்பரின் மகிமை குறையாது; பல நாட்களாக நாம் படித்துவந்த ஏட்டை அவமதிக்க வேண்டிய தில்லை" என்று வாதிக்கலாம்.

இவ்வளவேதான். இதில் பெரிய ஆபத்தான வித்தியாசம் ஒன்றுமில்லை. டி. கே. ஸி. யின் பணிக்கு இடைஞ்சல் செய்யாமலும், தமிழ் நாட்டில் அவர் மேல் அபார அன்பும் பக்தியும் கொண் டிருக்கும் கணக்கற்ற தமிழன்பர்களின் மனதைப் புண் படுத்தாமலும் வேண்டு மானால் விவாதத்தை நடத்தலாம்.

டி. கே. ஸி. வெளியிட்ட கம்பரை, செருகுகள் நீங்கிய உண்மைக் கம்பராக வைத்துக் கொள்வோர் அவ்வாறு வைத்துக் கொள்ளட்டும். "செருகு என்பதே கிடையாது, டி. கே. ஸி. சொல்லுவதை ஒப்புக் கொள்ள முடியாது, ஓலையேடுகள் ஒருவாறு அச்சிடப்பட்ட பிறகு அதைப் பற்றி விவாதமே கூடாது" என்கிற கட்சி

கேட்டுப் பாருங்கள்!

இந்தப் பந்திக்கு எவ்வாறு நாம் பாடகர்களைப் பொறுக்குகிறோம் என்று ஒரு நேயர் கேட்டிருக்கிறார். அதாவது ரேடியோவில் பாடுகிறவர்களில் சிலருடைய பெயரைப் போடுவானேன், வேறு சிலருடைய பெயரை விடுவானேன் என்று வினவுகிறார். பெயரைப் பொறுக்குவதில் நாம் கைக்கொள்ளும் முறை இதுதான் :

எல்லாருக்கும் தெரிந்த பிரபல பாடகர்களாயிருந்தால் அவர்களுடைய பெயர்களைக் கண்ணை மூடிக்கொண்டு சேர்த்துவிடுகிறோம். ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர், ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் போன்ற பிரபலஸ்தர்களுக்கு நமது சிபார்சு தேவையில்லை.

பிரபலமாகிக் கொண்டு வரும் பாடகர்கள், தெரிந்தும் தெரியாமலும் இருப்பவர்கள் — இப்படிப் பட்டவர்களுக்கு நமது சிபார்சையும் கூடச் சேர்க்கிறோம்.

ஒரு பாடகர் தமிழ்ப் பாட்டுக்களை முழுமையுமோ, பெரும்பாலுமோ பாடினால், அதைச் சாதாரணமாய்க் குறிப்பிடுகிறோம். இது தமிழிசை அன்பர்கள் — தமிழிசை விரோதிகள் இரு சாராருடைய சௌகரியத்துக்காகவுந்தான். தமிழிசை அன்பர்கள் ஞாபகம் வைத்திருந்து அக் கச்சேரிகளைக் கேட்கலாம்; தமிழிசை விரோதிகள் ஞாபகம் வைத்திருந்து கேட்காமலிருக்கலாம்.

★

சில காலத்துக்கு முன்பு இந்தப் பந்தியில் சிபார்சு செய்திருந்த ஒரு கோஷ்டியின் கச்சேரி ஓரிடத்தில் நடந்ததாம். கச்சேரி நன்றாயமையவில்லையாம். கச்சேரி கேட்ட நேயர் ஒருவர் கோபமாக நமக்குக் கடிதம் எழுதி யிருப்பதுடன், '' அந்தச் சங்கீத கோஷ்டியார், இனிமேல் மட்டும் எங்கள் ஊருக்கு வரட்டும் !............'' என்று பயமுறுத்தி யிருக்கிறார்.

முதலில், ரேடியோக் கச்சேரிக்கும் மேடைக் கச்சேரிக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும். ரேடியோவில் அபூர்வமாயிருக்கும் சாரீரம் மேடையில் எடுபடாமல் இருக்கலாம்.

மேலும், ஓரே ஒரு மேடைக் கச்சேரியிலிருந்து ஒரு இளம் வித்வானின் திறமையைச் சோதிக்கக் கூடாது என்பதையும் கவனிக்க வேண்டும். சங்கீத உலகில் கொட்டை போட்ட பிரபல வித்வான்களுக்கே நாலு கச்சேரியில் ஒரு கச்சேரிதான் நன்றாய் அமைகிறது. வேறு சில பிரபல வித்வான்களுக்குப் பாலக்காட்டு மணியின் மிருதங்கம் இல்லாவிட்டால் ஒரு கச்சேரியும் நன்றாய் அமைகிறதில்லை ! ஆகையால், புதிதாய்க் கிளம்பும் வித்வான்களையும், கோஷ்டிகளையும், ஓரே ஒரு கச்சேரியை மட்டும் கேட்டு விட்டு மதிப்பிடுவது முறையாகாது.

★

11உ. சென்னையில் 2-30 அல்லது 5-30க்கு ஸ்ரீமதி சுந்தரி தம்பியின் பாட்டைக் கேட்டுப் பார்க்கலாம். திருச்சியில் காலை 8-30 க்கு ஸ்ரீ ஆர். வி. சுப்பிரமணியம் என்னும் இளம் பாடகர் பாடுகிறார்.

12உ. சென்னையில் ஸ்ரீமதி லலிதாங்கி — வசந்த குமாரியின் கச்சேரி. திருச்சியில் ஸ்ரீ கே. ஏ. ராதாகிருஷ்ணப் பிள்ளை - பெரு பாலும் தமிழ்ப் பாட்டுக்கள்.

13உ. சென்னையில் ஸ்ரீ வேலூர் சுப்பிரமணி ஐயரின் பாட்டு பேஷாயிருக்கும். திருச்சியி ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் கச்சேரி.

15உ. சென்னையில் தேசிகரின் தமிழிசை

17உ. திருச்சியில் சாத்தூர் கிருஷ்ணய்ய கார் பாடுகிறார்.

18உ. சென்னையில் மைசூர் வெங்கடகி யப்பா வீணை வாசிக்கிறார்.

19உ. சென்னையில் ஸ்ரீமதி மீனாக்ஷி ரா கிருஷ்ணன் பாட்டு இருக்கிறது.



20உ. சென்னையில் 4-30 அல்லது 7-10 ராமநாதபுரம் கிருஷ்ணன் பாடுவதை அவ யம் கேட்கவேண்டும். நல்ல பாணியும் உயர்ந்த வித்வத்தும் உள்ள பாட்டு.

அன்று திருச்சியில் வேலூர் மீனாக சுந்தரம் பிள்ளை கச்சேரி.

யைச் சேர்ந்தவர்கள், டி. கே. ஸி. யின் வெளியீடுகள் ஒருவித காவிய சங்கிரகம் என்றே வைத்துக் கொள்ளலாம். அவ்வாறு வைத்துக்கொண்டு, விட்டுப் போன பாடல்கள் கம்பருடையதா, அல்லவா என்கிற கேள்வியையே பெரிய கேள்வியாகச் செய்துவிடாமல், டி. கே. ஸி. பொறுக்கித் திருத்தி வெளியிட்டிருப்பதை மட்டுமே எல்லாரும் படித்தால் தற்காலத் தமிழ் மக்களுக்கு அதுவே போதுமல்லவா? அவகாசமும் ஆற்றலும் உள்ள புலவர்கள், முழுக் கம்ப ராமாயணத்தையும் பல ஏடுகளில் உள்ளபடி படித்துத் தெளிவதை யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லையே?

முக்கியமாக, ஒரு மகான், சிறந்த பணி யாற்றுகிறவர் — அவருடைய மனது புண்படத் தாக்குதல் கூடாது. புதிதாக வெளி வந்திருக்கும் முத்தொள்ளாயிரப் பதிப்பையும், அதில் டி. கே. ஸி. அவர்களால் வரையப்பட்டிருக்கும் கண்ணைத் திறந்து காட்டும் அற்புதமான விளக்கத்தையும் படித்து அனுபவித்தவர்கள், என் கோரிக்கையை முழு மனதுடன் ஆதரிப்பார்கள்.

பொருள் என்ற உயிருக்கு சொற்கள் என்ற தாதுக்களைக் கொண்டு திருந்த ஒரு உடலை யாத்து, உயிரும் உடலும் கூடி, உணர்ச்சியும் அழகும் பொருந்திய உருவத்தோடு நிற்பது கவிதை. இத்தகைய சிருஷ்டியை — நன்னூலார் கூறுகிறபடி — 'உணர்வினில் வல்லோரே' மக்களுக்கு ஆக்கித் தரமுடியும். 'உணர்வு' என்றால் அறிவு மட்டுமல்ல; இதயத் துடிப்புகளும் கலந்த ஜீவ இயக்கம்.

கவிதை என்றால் என்ன என்பதை வெகு சிலரே உணர்வார்கள். தாம் உணர்ந்ததைப் பிறரும் உணருமாறு விளக்கும் ஆற்றல் படைத்தவர்கள் அதிலும் குறைந்தவர்கள். ஆற்றல் படைத்தவர்களாயினும் விடா முயற்சியுடன் சொந்த துக்கங்களையும் நோய்களையும் கவனியாமல் பணி செய்பவர்கள் மிக மிகச் சிலர். அவர்களில் ஒருவர் டி. கே. ஸி.; அவருடைய பணியும் புகழும் குறைவின்றி ஓங்க வேண்டும்.



பூந்தோட்டம்

ஆசிரியர்
ரவீந்திர நாத் டாகுர்
மொழிபெயர்ப்பு
த. நா. குமாரஸ்வாமி



●●● கதைப் போக்கு: பெரிய பூந்தோட்டத்தின் சொந்தக்காரன் ஆதித்யனும் அவன் மனைவி நீரஜாவும் இளம் காதலர்கள்; மனோகரமான உல்லாஸ வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். அவர்கள் தோட்டத்தின் நறு மலரின் மணம் போலவே, அவர்கள் மண வாழ்க்கையும் மணம் பொருந்தியதாக இருக்கிறது. ஆனால் வாழ்க்கை எப்பொழுதுமே இனிமையாக இருந்துவிடுகிறதா? நீரஜா உடல் நலம் குன்றிப் படுத்த படுக்கையாகி விடுகிறாள். அதனால் அவளுக்கு உலகமே கசந்து விடுகிறது. அத்துடன் ஆதித்யனின் தூர பந்துவான அழகி ஸரளா தோட்ட வேலையைக் கவனித்துக்கொள்ள வருகிறாள். வியாதியாய்ப் படுத்திருக்கும் மனைவியைத் தொந்தரவு செய்யக் கூடாதென்று எதற்கெடுத்தாலும் 'ஸரளா', 'ஸரளா' என்று கூப்பிட்டு அவளுக்கு வேலை யிடுகிறான் ஆதித்யன். அதற்குப் பிறகு மனக் குரங்கின் வேலைக்குக் கேட்பானேன்? இந்தத் தம்பதிகள் மனத்தில் மூளும் போராட்டத்தின் விறுவிறுப்பு கதையில் போகப் போக ஏறிக்கொண்டு வருகிறது.

ஏழாம் அத்தியாயம்
— விதியின் வஞ்சனை

● ஸரளா வந்தாள். அவளைக் கண்டதும் ஆதித்தியன் எரிச்சலுடன் "நீ நீரஜாவுக்கு இன்று முழுதும் மருந்தே கொடுக்கவில்லையா? ஆகாரம் கூடவா கொடுக்க மறந்துவிட்டாய்?" என்று கேட்டான்.

நீரஜா குறுக்கிட்டு "அவள் மீது எரிந்து விழுவானேன்? நான்தான் பிடிவாதமாக ஒன்றும் சாப்பிடாமல் இருந்தேன். என்னை எவ்வளவு வேண்டுமானாலும் வையுங்கள். ஸரளா, நீ போ! இங்கிருந்து என் வீணை வசவை வாங்கிக்கொள்ள வேண்டும்?" என்றாள்.

"அப்புறம் போகலாம், முன்னே மருந்தைக் கொடு. ஹார்லிக்ஸ் கஞ்சி சீக்கிரம் போட்டுக்கொண்டு வா!" என்றான் ஆதித்தியன்.

"ஐயோ, பாவம்! நாள் முழுவதும் தோட்டக்காரன் செய்ய வேண்டிய வேலையெல்லாம் அவள் தலை மேல் போட்டுச் சாகடிப்பது போதாமல் இந்த 'நர்ஸ்' உத்தியோகம் கூடவா அவளுக்கு? கொஞ்சமேனும் தயை தாக்ஷிண்யமில்லையே உங்களுக்கு. ரோஷ்னியைச் செய்யச் சொன்னால் போகிறது."

"அவளுக்கு இதெல்லாம் சரியாகச் செய்யத் தெரியுமா?"

"பேஷாகச் செய்வாள் .... இன்னும் செவ்வையாகச் செய்வாள்."

"ஆனால் —"

"ஆனால் என்றால் என்ன? ஆயா! ஆயா!"

"நீ ரொம்பப் பேசக்கூடாது; நடமாடவும் கூடாது. உன் உடம்பு தாளாது; அப்புறம் ஏதாவது கோளாறு ஏற்பட்டுவிடும், நீரு!"

"ஆயாவை நான் கூப்பிடுகிறேனே" என்று ஸரளா வெளியே சென்றாள். நீரஜா தன்னைப் பற்றிச் சொல்லியதற்குப் பதில் ஏதாவது சொல்லியிருக்கலாம் அவள். ஆனால் அவள் வாயினின்று ஒரு வார்த்தையும் கிளம்பவில்லை. ஆதித்தியனுக்கும் இது அதிசயமாக இருந்தது. ஸரளாவை வேலை வாங்குவது பெருத்த அநியாயமென்று அவன் மனதில் பட்டது.

மருந்தும் பத்தியமும் நீரஜாவுக்குக் கொடுத்தானதும் ஆதித்தியன் ஆயாவை நோக்கி,

"ஸரளாவை இங்கே அனுப்பி வை" என்றான்.

"எதற்கெடுத்தாலும் ஸரளா, ஸரளா தான்! பாவம், இப்படி ஏன் வாட்டி எடுக்கிறீர்கள்?"

"காரியமாகத்தான் கூப்பிடுவேன்."

"அப்புறம் ஆகாதா, அந்தக் காரியம்?"

"கொஞ்ச நேர வேலைதான்."

"ஸரளா பெண் பிள்ளை; அவளோடு என்ன இந்த வேலைகளைப் பற்றி —? அதை விட ஹரளாவைக் கூப்பிட்டு அவளைச் செய்யச் சொல்லுங்களேன்."

"உன்னைக் கல்யாணம் செய்து கொண்டதிலிருந்து ஓர் உண்மையைக் கண்டு பிடித்தேன். எப்போதுமே காரியத்தில் கருத்துடையவர்கள் பெண்கள். வேலை யென்றால் மூக்கால் அழுவது புருஷர்களின் லக்ஷணம் ... நீராக் குறையென்று நாங்கள் வேலையில் ஈடுபடுகிறோம். உங்கள் இனத்தவரோ உத்ஸாஹத்துடன் அதில் இறங்குகிறார்கள். இது விஷயமாக ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதலா மென்று யோசித்திருக்கிறேன். என் தினசரிக் குறிப்பைப் பார்த்தால் இந்த விஷயத்தைப் பற்றி எத்தனையோ உதாரணங்கள் கிடைக்கும்."

"விதி, இன்று வேலையே உயிராகக் கருதும் ஒரு பெண்ணை வஞ்சித்து விட்டதே! அதை என்னவென்று சிந்திப்பது? ஒரு பெரிய பூகம்பம் அல்லவா என் வேலையின் சிகரத்தைத் தரை மட்டமாக்கி விட்டது? ...... அந்தப் பாழுங் கோயிலில் தற்சமயம் ஒரு பேய்தான் வாஸம் செய்கிறது."

ஸரளா வந்தாள். ஆதித்தியன் அவளை, "ஆர்கிட் (Orchid) பகுதியில் வேலை யெல்லாம் முடிந்து விட்டதா?" என்று விசாரித்தான்.

"முடிந்து விட்டது."

"பாக்கி இல்லையே?"

"இல்லை."

"ரோஜாப் பதியன்களின் கதி என்ன வாயிற்று?"



“தோட்டக்காரன் மண்ணில் எருவைக் கலந்து வைத்துக் கொண்டிருக்கிறான்.”

“எருவா? நான் எல்லாம் முன்பே சரிப் படுத்தி வைத்திருக்கிறேனே. ஹாலாவின் பொறுப்பில் விட்டிருக்தேன். பேஷ், அந்த இடத்தில் பல் குச்சி நன்றாகப் பயிராகும்!”

பேச்சில் படிப்படியாக வெம்மை ஏறு வதைத் தடுக்க நீரஜா, “ஸரளா, நீ போ! ஆரஞ்சு ரஸத்தை எடுத்து வா. அதில் கொஞ்சம் இஞ்சியின் ரஸமும் தேனும் கலந்து கொண்டு வா” என்றான்.

ஸரளா தலைகுனிந்தபடியே அவ் வறையி லிருந்து வெளியேறினான்.



“நித்தியம் நாம் எழுந்திருப்போமே, அப்படித்தானே இன்றைக்கும் அதிகாலையில் எழுந்தீர்கள்?” என்றான் நீரஜா.

“ஆமாம்.”

“கடிகாரத்தில் முன்போலவே ‘அலாரம்’ வைத்திருந்தீர்களா?”

“வைக்காமல் இருப்பேனா?”

“நாம் உட்காருவோமே; அந்த வேப்ப மரத்தடியில், பட்டுப்போன மரக் கட்டையின் மேல் தானே வாஸு உங்களுக்கு டீ கொடுத்தான்? டீ செட்டில் ஒன்றையும் உடைக்கவில்லையே அவன்?”

“சரியாகத்தான் கொண்டு வந்திருந்தான். இல்லாமற் போனால் இத்தனை நாழிகைக்குள் உன்னுடைய நீதி ஸ்தலத்தில் நஷ்ட ஈடு வழக்குத் தொடுத்திருக்க மாட்டேனா?”

“எப்போதும் போலத்தானே இரண்டு நாற்காலிகளும் அங்கே இருந்தன?”

“எல்லாம் முன்னே எப்படி இருக்குமோ அப்படியேதான். விளிம்பில் நீலக்கரை போட்ட அதே ஆரெஞ்சு நிற டீ பாத்திரங்கள் தான். அதே வெள்ளிப்பால் கூஜா. அந்தச் சின்னச் சலவைக் கல் கிண்ணத்தில்தான் சர்க்கரை வைத்திருந்தது. யாளி படம் போட்டிருந்த அதே ஜப்பான் தட்டுத்தான்.”

“சரி; ஒரு நாற்காலியில் நீங்கள் உட் கார்ந்து கொண்டீர்கள்; மற்றொன்று காலி யாக இருப்பானேன்?”

“வேணுமென்றே காலியாக வைத்தேன். என்னுடைய ஆகாயத்தில் நக்ஷத்திரங்களின் எண்ணிக்கை சரியாகத்தான் இருந்தது. ஆனால் அடிவானத்துக்கு அப்பால் அல்லவோ என் வளர்மதி மறைந்திருக்கிறான்! நல்ல காலம் இருந்தால் அவளை அழைத்துக் கொண்டிருக்க மாட்டேனா?”

“உங்கள் தேக்கச்சேரியில் ஸரளாவை ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை?”

“உன் இடத்தில் வேறு ஒருவரைக் காண மனம் ஸஹிக்காது” என்று அந்தக் கேள்விக்கு அவன் விடை அளித்து இருக்கலாம். ஸத்ய வான் அல்லாததால் ஆதித்தியன், “அவன் நம்மைப்போல் பூஜை புனஸ்காரம் இல்லாத நாஸ்திகமன்று. காலையில் எழுந்ததும் ஏதோ தியானம் ஜபமெல்லாம் செய்து வருகிறான்” என்றான்.

“டீ அருந்தியானதும், ‘ஆர்கிட்’ குஞ்ஜத் திற்கு அவளை நீங்கள் அழைத்துக் கொண்டு போனாற் போலிருக்கிறதே?”

“ஆமாம், அங்கே வேலை பாக்கி இருந்தது. அதை யெல்லாம் பற்றி அவளுக்கு விவர

மாகச் சொல்லி விட்டுப் பூக்கடையைக் கவனிக்க ஓடினேன்."

"சரி, உங்களை ஒன்று கேட்கிறேன். ஸரளாவை ரமேனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டால் என்ன?"

"நான் பிரம்மாவா என்ன, முடி போடுவதற்கு?"

"வாஸ்தவமாகச் சொல்லுகிறேன்; பரிஹாஸமன்று. அவளுக்கு விவாகம் ஆகாமல் இருக்கப் போவதில்லை. ரமேனை விடவா 'ஒசத்தி' வரன் கிடைக்கப் போகிறான் அவளுக்கு?"

"விவாகத்திற்குப் பெண்ணும் தயாராக இருக்கிறாள். பிள்ளையும் சித்தமாகக் காத்திருக்கிறான். ஆனால் நடுவே மனசு ஒன்று இருக்கிறதே. அவர்கள் விருப்பம் என்னவோ? அங்கேதானே இடைஞ்சல்."

"இதெல்லாம் வீண் அளப்பு. இதிலிருந்து விவாகத்தை முடித்து வைக்க உங்களுக்கு இஷ்டமில்லை யென்று தெரிகிறது."

"ஸரளா போய்விட்டால் நம்முடைய தோட்டத்தின் கதி என்னவாகும்? நீயே சொல்லு. லாப நஷ்டத்தையும் பார்க்கத் தானே வேண்டும். நீரஜா, என்ன உனக்கு உடம்பு ஜாஸ்தியாக இருக்கிறதா?"

நீரஜாவின் முகக்குறியில் ஒருவித விகாரம் தென்படுவதைக் கண்டு ஆதித்தியன் திகிலடைந்து போனான். கன்னிய குரலில் அவள், "எனக்கு ஒன்றுமில்லையே. எதற்காகத் திடுக்கிட்டுப் போகிறீர்கள்?" என்றாள்.

புருஷன் எழுந்து போக யத்தனிக்கையில், அவள், "நமக்கு விவாகமான புதிதில் நாம் வைத்து வளர்த்ததுதான் அந்த 'ஆர்கிட்' குன்றும். அதை மறந்து விடாதீர்கள். நாமிருவருமே ஒவ்வொரு நாளும் சிரமப்பட்டு, அதை இவ்வளவு அலங்காரமாக ஆக்கினோம். அதைப் பாழாக்க உங்களுக்கு மனசு வருகிறதே?" என்றாள்.

ஆதித்தியன் பிரமித்துப் போய், "என்ன பேச்சு, அது? நான் அதைப் பாழ்படுத்துவேன் என்று எப்படிச் சொல்லுவாய், நீரு?" என்றான்.

"ஸரளாவுக்கு என்ன தெரியும், என் தோட்டத்தின் அருமை?" என்று நீரஜா படபடப்புடன் கேட்டாள்.

"அதிசயமாய் இருக்கிறது நீ சொல்வது? ஸரளாவுக்கா தெரியாது? என்னை யார் மனுஷ்யனாக்கியது? என் சித்தியின் புருஷர் அல்லவா? அவருடைய தம்பியின் மகள் தானே இந்த ஸரளா! அவர்களுடைய தோட்டத்தில் தானே, இந்த வேலையில் நான் பயிற்சி பெற்றுத் தேறி வந்திருக்கிறேன்? சித்தப்பா சொல்லுவார்; 'பசுவைக் கறப்பதற்கும், பூஞ்செடிகளைப் பாதுகாப்பதற்கும் பெண்களுக்குத் தெரியும்' என்று. எந்த வேலையிலும் அவருக்கு உதவியாக இருந்தவளாயிற்றே ஸரளா!"

"நீங்கள் அவளுக்கு உதவியாக இருந்தீர்கள்!"

"ஆமாம். ஆனால் காலேஜில் வாசித்துக் கொண்டிருந்ததால் அவள் அளவு நான் தோட்டத்தைக் கவனிக்கவில்லை. சித்தப்பா அவளுக்குத் தாமே கல்வி புகட்டி வந்தார்."

"அவர் சொத்தெல்லாம் அந்தத் தோட்டம் வைத்ததில்தானே அழிந்தது? அவருடைய வழியில் வந்தவளாயிற்றே இவளும்; இந்தத் திகில்தான் எனக்கு. அவளுடைய அவலக்ஷணந்தான் எல்லாவற்றையும் துடைத்து விட்டது."

"உனக்கென்ன உடம்பு, நீரு? திடீரென இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாயே? என் சித்தியின் கணவனுக்குத் தோட்டம் வைக்கத் தெரியுமே தவிர, அதிலிருந்து வரும்படி அடையும் மார்க்கம் தெரியவே தெரியாது. வித விதமான பூஞ் செடிகளைப் பண் செய்வதில் அவருக்கு இணை யாருமே இல்லை. நஷ்ட மடைவதிலும் அவருக்குச் சமானம் எவரும் இருக்க மாட்டார்கள். தோட்டம் வைக்க எனக்கு அவர்தான் மூலதனம் தந்து உதவினார். அப்போது அவருக்குப் பண முடை, திவாலாகப் போகும் சமய மென்பது கூட எனக்குத் தெரியாது. ஆனால் அவர் கண்ணை மூடிக்கொள்ளும் முன் அவர் பட்டிருந்த கடனை யெல்லாம் நான் தீர்த்து விட்டேன்; அதில் ஒரு பெரிய ஆறுதல் எனக்கு."

ஸரளா, ஆரஞ்சுப் பழத்தின் ரஸத்தை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள். நீரஜா அவளை நோக்கி, "அப்படி ஒரு பக்கமாக வைத்து விட்டுப் போ" என்றாள்.

அவ்வாறே வைத்து விட்டு ஸரளா சென்றாள். பழ ரஸம் டம்ளரிலேயே இருந்தது; அதை நீரஜா தொடவே இல்லை.

(தொடரும்)



ஆனந்தமாக லிப்டன் தேனீர் அருந்தும்போது பொறுப்பற்ற பேச்சுக்களைப் பேசாதீர்கள்.

★ கும்பகோண வாசிகள் மகாநாடு நடத்தியவர்களை அடிக்காமல் விட்டார்களே, அது வரை க்ஷேமந்தான். மகாநாடு நடத்தியவர்கள் மீது அவர்களுக்கு அத்தனை கோபம்! ஏன் கோபமாக இருக்காது? ......

தமிழ் இசை மகாநாடு

["நாடோடி" :: சாமா]

● ஏப்ரல் மாதம் 25-ந் தேதி விடியற் காலை கும்பகோணம் போய் இறங்கிய நானும், என் நண்பரும், பொழுது விடிந்ததும், கும்பகோணம் ஹோட்டல் களில் கிடைத்த ரவா தோசைகளையும், டிக்ரி காப்பி (பால் காப்பி) யையும் ஒரு கை பார்த்து விட்டு, மகாநாடு நோக்கிப் புறப்பட்டோம். மகாநாடு நடக்கின்ற ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் மண்டபம் எங்கு இருக் கிறது என்று கண்டுபிடிக்கும் சிரமம் கூட மகாநாட்டார் எங்களுக்கு வைக்க வில்லை. மகாநாட்டிலிருந்து ஒலி பரப்பும் கருவிகளின் வழியாகப் பெருகி வழிந்து வந்துகொண்டிருந்த இசை வெள்ளம் எங்களை நோக்கி வந்து எங்களை மகா நாட்டு மண்டபத்துக்கு அடித்துச் சென்றுவிட்டது.

● மகாநாட்டுக்கு வர வேண்டிய வர்கள் எல்லாரும் வந்திருந்தும் மகா நாட்டார் இன்னும் யார் வரவையோ எதிர் பார்த்தவர்கள் போல் மகா நாட்டை ஆரம்பித்து வைக்காமல், அப் பொழுது நடந்துகொண்டிருந்த நாதஸ் வரக் கச்சேரியைக் கேட்டுக் கொண்டே இருந்தார்கள்.

இப்படி யிருக்கையில் யாரோ ஒருவர் விசிறியும் கையுமாக ஓடி வந்து மேடை



திருச்சி விசுவநாதம்

மீது உட்கார்ந்திருந்த ஒருவருக்கு விசிற ஆரம்பித்தார். அவர் விசிற ஆரம்பித் தததான் தாமதம், மகாநாடு ஆரம் பித்து வைக்கப்பட்டது. அன்று மகா நாட்டைத் திறந்து வைத்தவர்கள் புலி



விசிறிக்காரர்

வரதாச்சாரியார், ராஜரத்தினம் பிள்ளை முதலியவர்கள் அல்ல, இந்த விசிறிக் காரர்தான் என்பது என் நண்பரின் அபிப்பிராயம்!

● அன்று காலை பேசிய ஸ்ரீ ஜி. சுப்ரமணிய பிள்ளை, ஸ்ரீ டி. என். ராஜ ரத்தினம், ஸ்ரீ சாம்பமூர்த்தி, (இவர் ஒரு ஆந்திரர் என்று குமாரராஜா முத் தையா செட்டியார் உள்பட அநேகர் நினைத்துக் கொண்டிருந்தார்கள் என் பது பின்னர் தெரிந்தது! இவர் அசல் தமிழர். அதுவும் கும்பகோணத்தைச் சேர்ந்தவர்!) ஸ்ரீ புலி வரதாச்சாரியார், ஸ்ரீ சம்பங்கமூர்த்தி ஆச்சாரியார், திருச்சி விசுவநாதம் ஆகிய எல்லாரும் நன்கு பேசினார்கள்.

போலீஸ் பாண்டுகளும், ராணுவ பாண்டுகளும் இந்திய சங்கீதம் வாசிக்க வேண்டும் என்று ஸ்ரீ சாம்பமூர்த்தி குறிப்பிட்டார். இசை சம்பந்தமான ஸ்டாம்புகள் வெளி வர வேண்டும் என் றும் அவர் தெரிவித்துக் கொண்டார். தமிழ்ப் பாடல்களைப் பாடும்போது வார்த்தைகளைக் கன்னாபின்னா வென்று

ஒன்று சேர்க்காமல், ஜாக்கிரதையாகப் பாட வேண்டிய அவசியத்தை ஸ்ரீ சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார் எடுத்துக் காட்டினார். "சாப்பாடு போடப்படும்" என்பதை "சாப்பா டுபோ டப்படும்" என்று சொல்லக் கூடாது என்று கூறினார்.

● அன்று பேசியவர்களுக்குள் திருச்சி விசுவநாதம் அவர்களின் பேச்சுதான் காரசாரமாக இருந்தது. தமிழிசைக்குக் கூறப்படும் எதிர்ப்புகளையெல்லாம் அவர் ஒவ்வொன்றாகத் தம் முன்னே நிறுத்தி, கன்னத்தில் அறை கொடுத்து அனுப்பினார். "எந்த இயக்கம் வளர வேண்டுமானாலும் எதிர்ப்பு அவசியம். தமிழ் இசை இயக்கத்துக்கு இதுவரை உள்ள எதிர்ப்பு போதாது. இன்னும் எதிர்ப்பை வரவேற்கிறேன். எங்கே இன்னும் கொஞ்சம் எதிர்ப்பு! எங்கே இன்னும் கொஞ்சம் எதிர்ப்பு!" என்று ஆவலாகக் கேட்டார். ஆனால் அவர் வரவேற்பை ஏற்றுக்கொள்ள மகாநாட்டில் யாரும் தயாராக இருந்ததாகத் தெரியவில்லை.

● இவர் பிரசங்கத்துடன் அன்றைய பிரசங்கக் கச்சேரி முடிந்தது. மாலையில் இசைக் கச்சேரி ஆரம்பித்தது.

காலையில் நடந்த பிரசங்கக் கச்சேரிகளுக்கும், மாலையில் நடந்த இசைக் கச்சேரிகளுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், காலையில் மகாநாட்டு மண்டபத்தில் ஸ்திரீகளுக் கென்று ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் ஒரு ஸ்திரீயைக் கூடக் காணோம். ஆனால் சாயந்திரம் ஸ்திரீகள் திரள் திரளாக (அதுவும் புருஷச் சீட்டு பெற்று) வந்து குழுமி விட்டார்கள். இரண்டு நாட்களும் காலையில் நடந்த பிரசங்கங்களுக்கு வராமல் மாலையில் நடந்த கச்சேரிகளுக்கு மாத்திரம் அவர்கள் வந்ததிலிருந்து, "தமிழிசையைப் பற்றிப் பேச்சு என்னத்திற்கு? பாடத்தானே வேண்டும்?" என்று அவர்கள் கருதியது போலிருந்தது.



"பட்டம் பதவிகளுக்காகப் பாடாதவர்"



வி. எம். ஆராவமுதய்யங்கார்

சேலம் ஜி. தேசிகன், ஸ்ரீமதி சூரியா பாய், ஸ்ரீமதிகள் லக்ஷ்மி, கௌரி, மன்னார்குடி ராஜகோபால் பிள்ளை, ஸ்ரீ சாத்தூர் சுப்ரமணிய அய்யர், ஸ்ரீ டி. கே. ரங்காச்சாரியார், ஸ்ரீமதி வசந்த கோகிலம் முதலியவர்கள் அன்றைய இசை விருந்தில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

அன்று கச்சேரி செய்தவர்களில் சாத்தூர் சுப்ரமண்ய அய்யர் கச்சேரி பலே ஜோர்.

கச்சேரி செய்த பாடகர்கள் சிலர் தமிழ்ப் பாட்டுக்களையும், தெலுங்குப் பாட்டுக்களைப்போல் வார்த்தைகள் புரியாதபடி பாடினார்கள். தெலுங்கு பாஷை நமக்குத் தெரியாததால் பாடகர்கள் அவற்றை எப்படிப் பாடினாலும் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் தமிழ்ப் பாட்டுக்களையும் இப்படிப் புரியாதபடி பாடும்போது இந்த தமிழிசை இயக்கத்தின் நோக்கமே அடிபட்டுப் போகிறது. இது விஷயத்தைப் பாடகர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

● அடுத்த நாள் காலை மகாநாட்டைத் திறந்து வைத்த டாக்டர் சுப்பராயன் பேசியது. (அதாவது எழுதி, அச்சடித்துக் கொண்டு வந்து படித்தது) முன்னால் பார்த்தால் ராயர் குதிரை, பின்னால் பார்த்தால் தெனாலி ராமன் குதிரை என்பார்களே அதைப் போல இருந்தது.

டாக்டர் தம் பிரசங்கத்தில் "காக்கைக்குத் தன் குஞ்சு பொன்



" கிழப் புலி "

குஞ்சு" "காக்கை குயிலாகி விடாது" என்று தமிழ் இசை சம்பந்தமாகக் கூறிய வார்த்தைகள் அங்குள்ளவர்களின் மனதைப் புண்படுத்திவிட்டன. "புண்படுத்தியது மாத்திர மல்ல, ஆத்திரமே உண்டாக்கிவிட்டது" என்று சொல்வது போலிருந்தது. தேவகோட்டை நா. அண்ணாமலை செட்டியார் அவர்களின் பிரசங்கம். இந்தக் "குஷிப் பேர்வழி" (இவர் அடிக்கொரு தடவை குஷி என்ற வார்த்தையை உபயோகித்ததால் இவருக்குக் 'குஷிப் பேர் வழி' யென்றே நாங்கள் பெயர் வைத்துவிட்டோம்) பாவம், டாக்டர் சுப்பராயனைக் "கொன்று தள்ளி விட்டார்!" "எனக்கு இசையிலுள்ள நுட்பங்கள் அதிகமாகத் தெரியாது" என்று ஒப்புக்கொண்ட டாக்டர் எதற்காகத் தமக்கு அதிகமாகத் தெரியாத விஷயத்தைப் பற்றிப் பேசினார் என்றே எல்லாரும் வருத்தப் பட்டுக் கொண்டார்கள். "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது போலத் தானே இவர் தம் பிரசங்கத்தைப் பற்றி நினைத்துக் கொண்டு விட்டார் என்று கூறினார்கள்.

அன்று காலை பிரசங்கக் கச்சேரி முடிவதற்கு முன் கச்சேரிகளில் பெரும்பாலும் தமிழ்ப் பாடல்களே பாடப்படவேண்டும் என்ற தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

● அன்று சாயந்திரம் ராஜாஜி முதற்கொண்ட பல பெரியார்களிடமிருந்து வந்த ஆசிச் செய்திகள் வாசிக்கப்பட்டன. ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் இல்லாத காரியம் ஒன்று உண்டா? அவரும் ஆசிச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

கச்சேரிகளுக்கு நடுவில் குமாரராஜா முத்தையா செட்டியார் பேசினார். தமிழ் இசை இயக்கத்தில் அரசியல் நோக்கம் எதுவும் கிடையாது என்று அடித்துக் கூறினார்.

அன்றைய சாயந்திர இசை விழாவில் பங்கெடுத்துக் கொண்டவர்கள், ஸ்ரீமதி கோமதி, ஸ்ரீ வீணை நிர்த்தான் செட்டியார், சித்தூர் சுப்ரமண்யப் பிள்ளை, சிங்கக் குட்டி ஜயராமன், ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர் முதலியவர்கள் ஆகும்.

இவர்களில் முக்கியமாக ஸ்ரீமதி கோமதி, ஸ்ரீ வீணை நிர்த்தான் செட்டியார், சிங்கக் குட்டி ஜெயராமன் இவர்களைக் குறிப்பிட வேண்டும். ஏன், எல்லாரையும் ஆவலாக எதிர் பார்க்க விட்டுவிட்டு வாசிக்காமல் சென்றுவிட்ட ஸ்ரீ ராஜரத்தினம் அவர்களையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

ஸ்ரீமதி கோமதி பாடியது மிகவும் நன்றாயிருந்தது. முக்கியமாக "சகல கலா வாணியே" என்னும் கேதார ராகப் பாட்டை மிக அழகாகப் பாடினார். வீணை நிர்த்தான் செட்டியார் "பட்டம் பதவிகளுக்காகப் பாடவில்லை, தங்கப் பதக்கம் பெற பாடவில்லை" என்று பாடினார். ஆனால் எதற்காகப் பாடினார் என்னும் விஷயத்தைக் காதில் விழாமல் செய்து விட்டார்கள் சபையோர்.

இவருக்கு அடுத்தபடியாக நடந்த சித்தூர் சுப்ரமண்ய பிள்ளையின் கச்சேரி மிக அமர்க்களமாய் இருந்த போதிலும் பாகவதருக்காகச் சட்டென்று முடிக்கப் பட்டது.

● பாகவதரின் வருகைக்காக எல்லாரும் மிக ஆவலாகக் காத்துக் கொண்டிருந்தார்கள். அந்த சமயம் காரியதரிசி முன்னால் வந்து, பாகவதர் சிரம பரிகாரம் செய்து கொண்டிருக்கிறார் என்றும், கால் மணி நேரத்துக்குச் சிங்கக் குட்டி ஜெயராமன் பாடுவார் என்றும் சொன்னபோது எல்லாருக்கும் சற்று ஏமாற்றமாகத் தான் இருந்தது. ஆனால் சிங்கக் குட்டி பாட ஆரம்பித்ததுதான் தாமதம், எல்லாரும் பாக-



" குஷிப் பேர்வழி "

வதரை மறந்துவிட்டார்கள். "இன்னொரு பாட்டு, இன்னொரு பாட்டு" என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள். பாகவதர் இத்தனை பக்க வாத்தியங்களுடன் பாடப்போகிறார் என்று காரியதரிசி ஏழெட்டு பக்க வாத்தியங்களின் பெயரைக் கூறியும் ஜனங்கள் சிங்கக் குட்டியை விடவில்லை. கால் மணி நேரம் பாட வந்த சிங்கக் குட்டி ஒரு மணி நேரத்துக்கு மேலேயே பாடினார்.

இவருக்குப் பிறகு, தியாகராஜ பாகவதர் பாடி, மகாநாட்டை முடித்து வைத்தார். அவர் பாட்டைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. பக்க வாத்தியக்காரர்களின் அமர்க்களத்தையும் விவரிக்க வேண்டியதில்லை.

● இரண்டு நாள் சாயந்திரமும் எத்தனையோ வித்வான்கள் பாட வேண்டியிருந்ததால், ஒவ்வொருவரும் அதிக நேரம் எடுத்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள மிக சாமர்த்தியம் வேண்டியிருந்தது. இதற்காக மகாநாடு நிர்வாகஸ்தர்கள் கையாண்ட "மாலை வழி" மிக நாசூக்காக இருந்ததுடன், எனக்கும் பிடித்திருந்தது. பாடகர்கள் பாடியது போதும் என்று தோன்றியவுடன், நிர்வாகஸ்தர்கள் கை நிறைய மாலைகளுடன் ஓடி வந்து ஆளுக்கொரு (கச்சேரி செய்தவர்களுக்குத் தான்) மாலை போட்டு விடுவார்கள். ஆனால் சில விடாக்கண்டர்கள் அதற்கு மேலும் விடேன், கொடேன் என்று பாடிக் கொண்டே போனபோது நிர்வாகஸ்தர்கள் பாவம், என்ன செய்வது என்று தெரியாமல் மிகவும் திண்டாடிப் போய்விட்டார்கள். இன்னொரு மாலையைத்தான் போட்டுப் பார்க்கலாமா என்றுகூட அவர்களுக்குத் தோன்றி விட்டது!

● இந்த மகாநாடு இத்தனை வெற்றிகரமாக நடந்ததற்கு ஸ்ரீ வி. எல். ஆராவமுத அய்யங்கார் அவர்களின் சலியாத ஊக்கமும், உழைப்புமே காரணமாகும். ஆனால் இதற்காக இவரைப் பிரமாதமாகப் பாராட்ட நான் தயாராயில்லை. இவர் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து சிறைவாசம் செய்துள்ள தேச பக்தர். தேசாபிமானம் உள்ள இவர் தமிழிசை அன்பராயும் இருப்பதில் என்ன ஆச்சரியம்?

மகாநாடு வெற்றிகரமாக நடப்பதற்கு ஒலிபரப்பும் கருவிகள் மிகவும் ஒத்துழைத்தன. ஒலிபரப்பு ஏற்பாடுகளை மிகத் திருப்திகரமாக ஏற்பாடு செய்தவர்கள் கும்பகோணம் ஸவுண்ட் ஸர்விஸ் காரர்களாகும்.



"சிங்கக் குட்டி"

● மகாநாடு முடிந்த மறு நாள் நாங்கள் ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். அப்பொழுது கும்பகோண வாசிகளுக்கெல்லாம் தமிழிசைக்காரர்கள் மீது மகா கோபம் என்று தெரிந்தது.

["பார்த்தீர்களா! நாங்கள் முன்னமேயே எதிர் பார்த்ததுதான். நல்லவேளை மகாநாடு நடத்தியவர்களை அடிக்காமல், விட்டார்களே அதுவரை க்ஷேமந்தான்" என்று தமிழிசை எதிர்ப்புக்காரர் ஒருவர் கூறுகிறார்.]

ஆம், இவர் கூறியதேபோல் கும்பகோண வாசிகள் மகாநாடு நடத்தியவர்களை அடிக்காமல் விட்டார்களே, அதுவரை க்ஷேமந்தான். மகாநாடு நடத்தியவர்கள் மீது அவர்களுக்கு அத்தனை கோபம்!

ஏன் கோபமாக இருக்காது? வெகு ஆசையாகத் தாய்மடியில் பால் ஊட்டிக் கொண்டிருக்கும் கன்றுக் குட்டியைப் பரபரவென்று அப்பால் இழுத்தால் எப்படியிருக்கும்? அதைப் போலத்தான் இருந்தது கும்பகோண வாசிகளுக்கும். இரண்டு நாள்கள் ஒரே தமிழிசை வெள்ளத்திலேயே மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு இரண்டு நாள்களுடன் மகாநாடு முடிந்து விடவே கோபம் வந்து விட்டது! மகாநாட்டை இரண்டு மாதங்களுக்காவது நடத்தக்கூடாதா என்று அவர்களுக்கு இருந்தது. என்னுடன் கூட மகாநாட்டுக்கு வந்திருந்த என் நண்பருக்கோ தமிழிசை மகாநாடு வருஷம் முழுவதும் கும்பகோணத்திலேயே நடந்து கொண்டிருக்காதா என்று இருந்தது. கும்பகோணம் ஹோட்டல்களில் கிடைத்த "டிகிரி காப்பி"யின் மீது அவருக்கு அத்தனை மோகம்!

தமிழ் வளர்ந்த கதை

பி. ஸ்ரீ

5. ஆராய்ச்சி விசித்திரங்கள்

"அகஸ்திய முனிவரின் மாணுக்கர் தொல்காப்பியர்" என்ருல், யாரும் ஒப்புக் கொள்ளக் கூடியதுதானே? எனினும் யாராவது அந்தக் காலத்திலே ஆசிரியர் தொல்காப்பியர் காது கேட்க அப்படிச் சொல்லி யிருந்தால், உடனே நமது ஆசிரியர் சிரித்திருப்பார். ஏன்? சில ஆராய்ச்சிக்காரர்கள் கருதுவது போல், "நான் அகத்திய முனிவரின் மாணுக்கரில்லையே!" என்று எண்ணிச் சிரித்திருப்பாரா?

ஆம்: அகஸ்தியர் பொதிய மலைக்கு வந்ததும், தொல்காப்பியர் முதலான மாணுக்கர்களுக்குத் தமிழ் கற்பித்ததும் புராண கதைதான்; மலையை அடக்கிக் கடலைக் குடித்த அதே ரகம்—என்று அபிப்பிராயப் படுகிறவர்கள் உண்டு. இவர்கள், "தொல்காப்பியத்திலாவது. தொல்காப்பியப் பாயிரத்திலாவது அகஸ்தியரைப் பற்றிய பிரஸ்தாபம் இல்லையே!" என்கிருர்கள்.

இத்தகைய ஆராய்ச்சித் திறமும் சந்தேக மனப்பான்மையும், நம் முன்னேர் காலத்திலும் இருந்தன என்று தெரிகிறது. தொல்காப்பியருடைய குரு அகஸ்தியர் என்பதையும், அகத்தியத்தைத் தழுவித் தொல்காப்பியர் தொல்காப்பியம் இயற்றினர் என்பதையும் ஒப்புக் கொள்ளாத சிலர் பேராசிரியர் என்ற உரையாசிரியர் காலத்திலும் இருந்தார்கள்.

தொல்காப்பியத்திலே ஒரு சூத்திரத்திற்கு உரை எழுதும்போது பேராசிரியர், "இப்படிப்பட்ட அபிப்பிராயம் *பழமையானதல்ல" என்கிருர். நக்கீரர் முதலான தமிழ்ப் பெரியோர்களுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமானது என்கிருர். அன்னிய மதத்தினாகளான ஜைன பெளத்தர்கள்கூட இப்படி அபிப்பிராயப்பட வில்லையே!—என்கிருர். சில பழைய நூல்களை ஆதாரமாய்க் காட்டி, அகத்தியமே முதல் நூல் என்றும், பொதிய மலையில் அகஸ்தியரிடம் தமிழ் கற்ற பன்னிரண்டு புலவர்களில் தொல்காப்பியரே முதன்மையானவர் என்றும் தொன்று தொட்டு வந்த அபிப்பிராயத்தை வற்புறுத்தி முடிவு கட்டுகிருர் பேராசிரியர்.

சரி; "அகஸ்திய முனிவரின் மாணுக்கர் தொல்காப்பியர்" என்று சொல்லும் போது தொல்காப்பியருக்குச் சிரிப்பு வரக் காரணந்தான் என்ன? குருவுக்கும் சிஷ்யருக்கும் இடையே ஏதாவது விரோதம் உண்டா? "ஆம்" என்று ஒரு கதை சொல்லுகிருர் உரையாசிரியர் நச்சினர்க்கினியர்.

கதை விசித்திரங்கள்

"நீ போய் வட தேசத்திலிருக்கும் என் மனைவியை அழைத்து வா!" என்று கட்டளையிட்டாராம் அகஸ்திய முனிவர் தொல்காப்பியரை நோக்கி. "ஆனல் அப்படி வரும்போது முன்னுகவோ பின்னுகவோ நாலு "கோல் நீளம் இருக்க வேண்டும் உங்களுக் கிடையே!" என்றும் எச்சரிக்கை செய்தாராம். அப்படியே தொல்காப்பியர் போய் லோபாமுத்திரை என்ற குரு பத்தினியை அழைத்துக் கொண்டு வரும்போது, வைகை யாற்றிலே வெள்ளம் வந்து அவளை இழுத்துக் கொண்டு போயிற்றும். உடனே தொல்காப்பியர் ஒரு மூங்கிற் கழியை நீட்ட, அதைப் பிடித்துக் கொண்டு கரையேறி விட்டாளாம் லோபாமுத்திரை. குருமூர்த்தி மகிழ்ச்சி அடைவதற்கு மாருகக் கோபம் கொண்டு சிஷ்யரைச் சபித்தாராம். இந்த அநியாயத்தைப் பொறுக்க முடியாமல் தொல்காப்பியரும் கொதித்துச் கடச்கட எதிர்ச் சாபம் கொடுத்து விட்டாராம் அகத்தியருக்கு.

கதை எப்படி? "தொல்காப்பியத்திலே குருவைப் பற்றிய பிரஸ்தாபம்

*பேராசிரியர் காலத்தில் புதுமையாக இருந்தாலும் நமக்குப் பழமையானதுதான்.

ஏன் இல்லை?" என்று ஆராய்ச்சி செய்யும் 'சந்தேக ஆத்மா'க்களுக்குச் சமாதானம் சொல்ல முளைத்தெழுந்த கதைதான். ஆனால் இந்தக் கதையைக் கேட்டால் 'சந்தேகப் பிராணி'களுக்குச் சந்தேகமும் அதிகப்படும்; தொல்காப்பியருக்குச் சிரிப்பும் அதிகப்படுமே!

"அகஸ்தியர் மலையை அடக்கினர்; கடலைக் குடித்தார்!" என்ற புராணக் கதைகள் பொருள் புதைந்த கதைகள். நச்சினார்க்கினியர் சொல்லும் கதையோ, அருஞ் செயல்கள் செய்த குருவுக்கும் சிஷ்யருக்கும், குருபத்தினிக்கும்கூட அநீதி செலுத்துகிறது!

இலக்கண விசித்திரங்கள் ●

சரி: அகஸ்தியர்மீது தொல்காப்பியருக்குத் துவேஷமும் கிடையாதென்றால், "அகஸ்திய முனிவரின் மாணாக்கர் தொல்காப்பியர்" என்று கேட்டதும், ஏன் அவர் சிரிக்க வேண்டும்? "இந்த வாக்கியத்திலே பொருளில்பிழையில்லை; சொல்லிலேதான் பிழை!" என்பார். தொல்காப்பியர். "இந்தச் சிறு வாக்கியத்திலே இரண்டு இலக்கணப் பிழைகள்!" என்பார். "என்ன?" என்று ஆச்சரியப் படும்போதே, "இந்த வாக்கியத்தின் முதல் இரண்டு சொற்களிலுமே இரண்டு பிழைகளும் இருக்கின்றன: '[அகஸ்தியர்' என்பது முதலாவது பிழை; 'அகஸ்திய முனிவர்' என்பதிலேயே இரண்டாவது பிழையும் இருக்கிறது" என்பார். "எப்படி?" என்று கேட்டுப் பார்ப்போம், தொல்காப்பியரையே.

தொல்காப்பியர் முதலாவது,

> சிதைந்தன வரினும்
> இயைந்தன வரையார்

என்று இலக்கணம் காட்டி, "அகஸ்தியர்" என்ற வடமொழி இயற் பெயரைத் தமிழில் சிதைத்து "அகத்தியர்" என்று தமிழுருவம் கொடுத்துத்தான் எழுத வேண்டும்; உச்சரிக்கவேண்டும் என்பார்.

தொல்காப்பியர் — சூத்திரத்திற்கு இணங்க நம் முன்னோர் "பத்மநாபன்" என்ற பெயரைப் "பற்பநாபன்" என்றும், "விஷ்ணு" என்பதை "விண்டு" என்றும், "விட்டு" என்றும் கூட மாற்றிவிட்டார்களல்லவா? இனி, "அகத்திய முனிவரின் மாணாக்கர் தொல்காப்பியனர்" என்று திருத்திச் சொன்னலும், இன்னமும் ஒரு பிழை பாக்கி இருக்கிறது என்பார் தொல்காப்பியர்.

> சிறப்பி ஞகிய
> பெயர்நிலைக் கிளவிக்கும்
> இயற்பெயர்க் கிளவி
> முற்படக் கிளவார்
> [கிளவி: சொல்.]

என்று சூத்திரம் காட்டுவார். "சிறப்புப் பெயரைக் குறிக்கும் சொல்லுக்கு முற்பட இயற் பெயரைக் குறிக்கும் சொல்லை வைக்கக் கூடாது" என்பது சூத்திரத்தின் பொருள். "அகத்திய முனிவர்" என்பதில் "அகத்தியர்" முனிவருடைய இயற்பெயர்: "முனிவர்" சிறப்புப் பெயர். சிறப்புப் பெயரை முன்னும், இயற் பெயரைப் பின்னுமாகவே வைத்துச் சொல்ல வேண்டும். என்பது சூத்திரம். ஆதலால் "முனிவர் அகத்தியர்" என்றுதான் தொல்காப்பியர் சொல்லுவார்.

எனினும் "அகத்திய முனிவர்" என்று (இயற்பெயர் முன்னும் சிறப்புப் பெயர் பின்னுமாகப்) பிற்காலத்தார் வழங்கத் தொடங்கி விட்டார்கள். இந்த முறையே சரியென்று ஒப்புக்கொண்டது பிற்கால இலக்கணமாகிய நன்னூலும்.

> இயற்பெயர் ஏற்றிடில்
> பின்வரல் சிறப்பே

என்பது நன்னூல் சூத்திரம். நன்னூலார் தொல்காப்பியரைப்போல் "முனிவர் அகத்தியர்" என்று சொல்லமாட்டார்; "அகத்திய முனிவர்" என்றுதான் சொல்லுவார். காலத்துக்கு ஏற்ற கோலம் பூண்டு மாறிக் கொண்டே வருகிறது நமது பாஷையும், மற்றப் பாஷைகளைப் போலவே.

பெயர் விசித்திரங்கள் ●

எனினும் சில புலவர்கள் இயற் பெயர்களையும் தங்கள் இஷ்டப்படியெல்லாம் சிதைத்து விடுகிருர்கள் — தொல்காப்பியரின் பெயரால். ஒரு தமிழ்ப் புலவர் "டெனிசன்" என்ற ஆங்கிலக் கவியின் பெயரைச் சிதைத்துத் "தேனிசையன்" என்று தமிழுக்கு இசைவாகவே இசைத்துக் கொண்டார்! அதே புலவர் "ஷேக்ஸ்பியர்" என்ற ஆங்கிலக் கவிச் சக்கரவர்த்தியைச் "செகப் பிரியர்" (உலகத்திற்கெல்லாம் பிரியமானவர்) என்றே தமிழ்ப்படுத்தி விட்டார்! ஷேக்ஸ்பியரைச் "சேஷப்பைய" ராக்கிவிடாமல் "ஜெகப் பிரியர்" என்ருவது விட்டாரே! — என்று சிலர் எண்ணிக்கொண்டிருக்கும் போதே, "ஜெகப்பிரியர் ஸம்ஸ்கிருதமாகி விட்டாரே!" என்ற

கவலையுடன் வேறொரு புலவர் "சேக்கு வியர்" என்று எழுதி விட்டார்.

"காண்டர்பரி" என்ற ஆங்கில ஊர்ப்பெயரை ஒரு தமிழ்ப் புலவர் "கந்தர் புரி" (கந்தர் = முருகக் கடவுள்) என்று தமிழ்ப்படுத்தினார்! "ஆக்ஸ் போர்டு" என்பதைக் "கோதீர்த்தபுரி" யென்றும், "சோம சுந்தர சாஸ்திரி" என்ற பெயரை "மதியழகுக் கலைஞர்" என்றும் மொழி பெயர்த்து எழுதுகிற புலவர்களும் உண்டு. இப்படி யெல்லாம் பெயர்களைச் சிதைத்தும் வதைத்தும், மாற்றியும் மறைத்தும், மொழி பெயர்த்தும் பொருள் பெயர்த்தும் எழுதுவதுகூடத் "தொல்காப்பியர் உத்தரவுப்படியே!" என்று நம்புகிறவர்களும் உண்டு. ஆனால் இந்தப் பெயர் விசித்திரங்களுக்கெல்லாம் தொல்காப்பியர் பொறுப்பல்ல. இவை சில புலவர்களின் வினோதமான பொழுது போக்கு: அவ்வளவுதான்.

பொதுவாகப் பிரபல பண்டிதர்களும் இந்நாளில் அகஸ்தியரை "அகஸ்தியர்" என்றே எழுதி வருகிறார்கள். "அகஸ்திய முனிவரின் மாணாக்கர் தொல்காப்பியர்" என்ற வாக்கியத்தில் பிழை காண மாட்டார்கள் தற்காலப் புலவர்கள்.

எனினும், காலச்சக்கரம் சுழன்று வந்து தொல்காப்பியர் பிரயோகத்திற்கும் புத்துயிர் அளித்து விட்டது போல் தோன்றுகிறது. ஆங்கில முறையில் "பேராசிரியர் பூதலிங்கம்" என்று சொல்லுவதுபோல் "முனிவர் அகஸ்தியர்" என்றும் சொல்லக்கூடுமல்லவா?

கடவுள் பக்தி!



தகப்பனார்:—புது வாத்தியார் எப்படியிருக்கிறார்?

பையன்:—கடவுளிடம் அவருக்கு ரொம்ப பக்தி யிருக்கிறது.

தகப்பனார்:—அது உனக்கு எப்படித் தெரியும்?

பையன்:—கணக்கைக் கொண்டு போய்க் காண்பித்தேன். அவர் அதற்கு 'அட கடவுளே' என்றார்.

வட்ட மேஜை

மதராஸ்
29—4—43

கல்கி ஆசிரியருக்கு:

"நாடோடி" கல்கியில் சேர்ந்தது பற்றி எனக்குள்ள சந்தோஷத்தைத் தெரிவிக்கவே இக் கடிதம்.

நாடோடியின் கட்டுரைகளின் மேல் எனக்குத் தனி மதிப்பு உண்டு. அவருடைய கதா பாத்திரங்கள், நாம் தினந்தோறும் பேசும், பழகும், சண்டை விட்டுக்கொள்ளும் நண்பர்கள். அவருடைய கட்டுரைகளை வாசிக்கும்போது கட்டுரை வாசிப்பது போலில்லை. மேற்சொன்ன நண்பர்களுடன் பேசுவது போலவும், பழகுவது போலவும், சண்டைவிட்டுக் கொள்வது போலவும், அவர்களைப் பார்த்து 'நையாண்டி' செய்வது போலவு மிருக்கிறது. சில சமயம் நாடோடி நம்மையே ஞாபகப்படுத்தி விட்டுக் கைகொட்டிச் சிரிக்கிறார். அப்பொழுது நாம் அவருடன் சேர்ந்து கொண்டு கூடச் சிரிக்கிறோமே தவிர, முகம் நீண்டு மூலையைத் தேடுவதில்லை.

நாடோடியின் உலகம், நாமறிந்த உலகம். இன்னும் அவர் கையாளாத ('கண்டு பிடிக்காத' என்று சொல்லமாட்டேன்) கதாபாத்திரங்கள் ஏதேஷ்டம். நாமெல்லோரும் தேவர்களாக ஆகும் வரையில் நாடோடிக்கு வேலை இருக்கிறது. அந்த மாறுதல் வெகு அருகாமையில் இல்லாததால், நாடோடியின் அதிகமான கட்டுரைகளை எதிர்பார்க்கிறேன்.

என். சி. ராமானுஜன்.

ஸ்ரீ வில்லிபுத்தூர்.
2—5—43

சார், கல்கி!

"நாடோடி" தங்களுக்கு உதவியாசிரியராக வந்ததைக் குறித்துச் சந்தோஷமடைபவர்களில் நானும் ஒருவன். 1-5-43ல் வெளியான கல்கியில் "நாடோடி" யவர்களால் எழுதப்பட்ட கதையில் திமிங்கிலவயிற்றுக்குள் ஒளித்து வைத்திருந்த ஸீல் போட்ட கவரை பூலோக வாசி சமுத்திர ராஜனிடம் யாசித்ததை வாசித்தபொழுது வந்த சிரிப்பை என்னால் அடக்க முடியவில்லை. ஆறறிவு படைத்த மக்கள் பகுத்தறிவு இல்லாமல் சேலைகளையும் வேட்டிகளையும் கிழித்துக் கொண்டு திரிகின்றார்களே, அவர்களைத் திருத்தப் பகுத்தறிவுப் போட்டிகள் எவ்வளவு பாடு படுகின்றன என்பதையும் விளக்கிக் காட்டுகிறார்.

நாடோடியவர்கள் நெடுங்காலம் தங்களோடிருந்து கல்கியைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டுமாய்த் தமிழ் அன்னையை வேண்டுகின்றேன்.

எம். எம். அற்புதம்.

["நாடோடி" இதுவரையில் தமது வாழ்க்கையிலும் நாடோடியா யிருந்து வந்தார். ஓரிடத்தில் நிலைத்திருக்கும் பொருட்டே "கல்கி"யைச் சேர்ந்திருக்கிறார்.—ஆசிரியர்.]


TRADE MARK
டி.எஸ்.ஆர்.
அரைக்கீரைவிதை
சந்தனாதி
தைலங்கள்

★ அவன் மனம் அந்த இளம் பெண்ணுக்காகப் பரிதபித்தது. தன் தகப்பனாரின் ஸ்தானத்தில் இருக்கக்கூடிய வயதான கணவனுடன் அவள் எப்படி வாழ்க்கை நடத்தினாள் என்பதே அவனால் நினைத்துப் பார்க்கக் கூடியதாய் இல்லை.

தொடர்கதை

உறைந்த வதியல்

து. ரா.

பத்தாம் அத்தியாயம்

"ராஜாத்தி"

மதுரம் வந்து ஒரு மாதம் இன்னும் ஆகவில்லை.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை தங்கமணி ஸினிமா பார்க்கப் போவதென்று தீர்மானித்தான். சுசீலாவையும் தன்னுடன் வரும்படி கூப்பிட்டபொழுது அவள் "மதுரத்தையும் அழைத்துக் கொண்டு வரட்டுமா?" என்றாள்.

"என்னத்துக்கு? நாம் போகிற இடத்துக் கெல்லாம் அவளும் வர வேண்டுமா?"

"இல்லை, பாவம்; அவள் ஸினிமாவே அதிகம் பார்த்ததில்லையாம். அதற்காகத்தான் சொன்னேன்."

"சரி, அப்படியென்றால் அழைத்துக் கொண்டு வாயேன். ஆனால் நான் ஹிந்தி டாக்கிக்குத்தான் போகப் போகிறேன். தமிழ்ப் படத்திற்கு இல்லை" என்றான். தங்கமணிக்குத் தமிழ் டாக்கி என்றால் வெறுப்பு.

சுசீலாவும் மதுரமும் காரின் பின் ஸீட்டுகளில் உட்கார்ந்தார்கள்.

"விசித்ரா" டாக்கீஸில் அன்று ஏகக் கூட்டம்.

வீட்டுக்குத் திரும்பி வரும் பொழுது சுசீலாவும் மதுரமும் ஸினிமாவைப் பற்றிய சம்பாஷணையில் ஆழ்ந்து விட்டார்கள். "வடக்கத்தியார்களின் சாரீரம் எவ்வளவு இனிமையாக இருக்கிறது அக்கா! வாய் அசங்காமல் பாடுகிறார்கள்; முகத்தைக் கோணுகிறதே இல்லை!" என்று மதுரம் வியந்தாள்.

சுசீலா சிரிப்புடன் தங்கமணியை நோக்கி, "கேட்டீர்களா? உங்கள் கோஷ்டியைச் சேர்ந்தவள் இவள்!" என்று சொல்லிவிட்டு மதுரத்தைப் பார்த்து "அவரும் உன்னைப் போலத்தான். ஹிந்தி டாக்கி, ஹிந்தி பாட்டு என்றால் அவருக்குப் பைத்தியம்" என்றாள்.

படம் பார்த்துவிட்டு வந்து இரவு சாப்பிடும்பொழுது தங்கமணி வழக்கத்துக்கு மாறாக மௌனத்தில் ஆழ்ந்திருந்தான். காரணம் என்னவாயிருக்கும் என்று தோன்றாமல் சுசீலா யோசிக்கலானாள். போஜனம் முடிந்ததும், "சுசீலா, இங்கேவா ஒருசமாசாரம்" என்று அவன் அழைத்ததும் அவளுடன் சென்றாள்.

"இன்று ஸினிமா கொட்டகையில் என்ன நடந்தது தெரியுமா?"

"ஏன்; என்ன நடந்தது?"

"அங்கே என் சிநேகிதர்கள் வந்திருந்தார்கள். அவர்களுடன் நான் பேசிக் கொண்டிருந்தேனே பார்த்தாயல்லவா? அவர்களில் ஒருவன் மதுரத்தை நீ என்று நினைத்துவிட்டான். 'யார் அது, உன் மனைவியா?' என்று கேட்டான். உன்னைத்தான் கேட்கிறானாக்கும் என்று 'ஆமாம்' என்றேன். அப்புறம் உன் பக்கம் பார்த்து 'கூட இருக்கிறது யார் உன் தங்கையா?' என்றான்! அப்பொழுதுதான் அவன் முதலில் கேட்டது மதுரத்தை என்று தெரிந்தது —"

சுசீலா அதிசயத்துடன் மோவாய்க் கட்டையைப் பிடித்துக் கொண்டாள். "நன்றாயிருக்கிறது! அவர்களுக்கென்ன கண் அவிந்து போய்விட்டதா? பாவம்! அவள் கையிலே கழுத்திலே ஒன்றும் இல்லாமல் மூளியாய் இருக்கிறதைப் பார்க்கவில்லையா?"

"தூரத்திலே அதெல்லாம் எங்கே தெரிகிறது? தெரிந்தால்தான் என்ன; இந்தக் காலத்திலே நகை ஒன்றும் போட்டுக் கொள்ளாமல் இருப்பது

தானே நாஸூக்காய் இருக்கிறது? எதற்காகச் சொல்லுகிறேனென்றால், நீ அவளுக்கு அந்தப் புடவை வாங்கிக் கொடுத்ததுதான் ஆபத்தாய்ப் போய் விட்டது. ஏற்கெனவே அவள் சமையற்காரி என்று சொன்னாலே ஒருத்தரும் நம்பமாட்டார்கள். இப்பொழுது பார்த்தால் நம்ப முடியுமா?"

"அதற்குத்தான் நானும் அவளை என் தங்கை என்று சொல்லிக் கொள்ளலாம் என்று சொன்னேன். என்ன இருந்தாலும் தலை பின்னிக் கொள்ளாமல் பாழ் நெற்றியாயும் இருக்கிறவளைப் பார்த்து இப்படிக் கேட்குமா அசடுகள்?" என்று கோபித்தாள் சுசிலா.

"அதெல்லாம் யார் கவனிக்கிறார்கள்? தூரத்திலிருந்து பார்த்தால் ராஜாத்தி மாதிரி இருக்கிற சின்னப் பெண்ணை விதவை என்று எப்படி நினைக்கத் தோன்றும்?"

அன்றிரவு வெகு நேரம் சுசிலாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. 'ராஜாத்தி மாதிரி இருக்கிற சின்னப் பெண்' என்று தங்கமணி கூறிய வார்த்தைகள் அடிக்கடி மனதில் தோன்றிக் கொண்டே இருந்தன. படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள். அப்புறம் தங்கமணி விழித்துக் கொண்டு விடுவானோ என்று அசையாமல் கிடந்தாள். இறுக்கம் அதிகமாக இருந்ததால் உடம்பெல்லாம் வியர்த்தது. எழுந்திருந்து அறையை விட்டு வெளிப்பட்டு மச்சு முகப்புக்கு வந்தாள். அங்கு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து ஆகாயத்திலிருந்த நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்த சர்மா, "என்ன சுசிலா, இன்னும் தூங்கவில்லையா நீ?" என்று கேட்டார்.



"இல்லை அப்பா, தூக்கம் வரவில்லை. உள்ளே ரொம்ப இறுக்கமாயிருக்கிறது. நீ ஏன் அப்பா இன்னும் படுத்துக் கொள்ளவில்லை?"

"எனக்கு இதற்குள் ஏது தூக்கம்? இன்னும் சற்று நாழியாகும்" என்றார் சர்மா.

பிறகு, "இங்கே என்ன காற்று அடிக்கிறது என்கிறாய்? ஜிலு ஜிலு என்று ஆனந்தமாய் இருக்கிறது. அதோ பார், அங்கே ஒரு கூட்டமாய்த் தெரிகிறதே அதுதான் சப்த ரிஷி மண்டலம் —" என்று சர்மா வான வெளியில் நட்சத்திரங்களைச் சுட்டிக் காட்டத் தொடங்கினார்.

பதினோராம் அத்தியாயம்

மதுரம் பேசுகிறாள்

சித்திரை மாதம் இருபத்தி மூன்றும் தேதி. ஸ்ரீ ராமநவமி தினம்.

அன்று மத்தியானம் சுசிலா நாராயணய்யர் வீட்டுக்குச் சென்றிருந்தாள். வழக்கத்திற்கு மாறாக அன்றைக்குத் தங்கமணி மூன்று மணிக்கே ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்தான். தன் அறைக்குச் சென்று உடை மாற்றிக் கொண்டு "சுசிலா!" என்று அழைத்தபோது, பதில் வராமல் போகவே, "சுசிலா! சுசிலா!" என்று இரண்டு மூன்று முறை இரைந்து கூப்பிட்டான். பதிலில்லை. ஆனால் மதுரம் சமையல் அறையிலிருந்து வந்து தங்கமணி அறைக் கதவண்டை நின்று, "அக்கா ஆத்திலே இல்லை. ராஜம் மாமியாத்துக்குப் போயிருக்கிறாள்" என்றாள்.

தங்கமணி எப்பொழுதுமே சங்கோசப் பிராணி. தன் எதிரில் வர வெட்கப்பட்டுக்கொண்டு அறைக்கு வெளியே அடக்கத்துடன் நிற்கும் பெண்மணியை நிமிர்ந்துகூடப் பார்க்காமல், "ஓஹோ" என்றான். பிறகு "கொஞ்சம் தீர்த்தம் கொடு, அம்மா! தாகமாய் இருக்கிறது" என்று கேட்டான்.

மதுரம் ஒரு தட்டில் முதல் நாள் செய்த முறுக்கையும் இரண்டு டம்ளர்

களில் பானகமும் நீர் மோரும் எடுத்துக் கொண்டு வந்து மேஜை மேல் வைத்து விட்டுத் திரும்பிச் செல்லும்பொழுது, தங்கமணி "இதெல்லாம் என்ன?" என்று வினவினான்.

மதுரம் நின்று தலையைக் குனிந்து கொண்டே, "பானகம், நீர் மோர்" என்று கூறிவிட்டு, முகத்தைச் சற்று நிமிர்த்தி "இன்றைக்கு ராம நவமி" என்றாள்.

அப்பொழுதுதான் அவளைச் சற்று ஏறிட்டுப் பார்த்தான் தங்கமணி. உடனே "அடடா! கடவுளுக்குக் கண் இல்லையா, என்ன? இப்படிப்பட்ட பெண்ணின் தலையில் அவன் இந்த மாதிரியா எழுத வேண்டும்?" என்று அவன் மனம் நினைத்தது. உடனே "ஏனம்மா, உனக்கு அப்பா அம்மா இரண்டு பேருமே இல்லையா?" என்று கேட்டான்.

அவள் சரித்திரத்தை விவரமாகக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவன் மனதில் ஓர் ஆசை தோன்றிற்று. அவளைக் கேட்டால் என்ன நினைத்துக்கொள்வாளோ என்று ஒரு கணம் தயங்கிவிட்டு, பிறகு மனதைத் திடப்படுத்திக் கொண்டு அந்தக் கேள்வியைக் கேட்டான்.

மதுரம் அவன் முகத்தை ஒரு தரம் பார்த்துவிட்டு, தயங்கி நின்றாள். அவள் மனதிலும் என்ன எண்ணங்கள் தோன்றினவோ தெரியவில்லை.

"ஆமாம், அம்மா செத்துப் போய் ரொம்ப நாள் ஆகிறது. அப்பா இப்பொழுதுதான் இரண்டு வருஷத்திற்கு முன்பு காலமானார். என் இளைய தாயார் இருக்கிறாள், இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு அவள் அப்பா ஆத்திலே, — தீர்த்தம் கொண்டு வரட்டுமா?" என்றாள்.

"வேண்டாம்."

அவள் வெட்கப்பட்டாலும் பிறகு சமாளித்துக் கொண்டு பதில் அளித்ததில் தங்கமணிக்கும் தைரியம் உண்டாயிற்று.

"உனக்கு மைத்துனர்கள் இருக்கிறார்கள் அல்லவா?"

"மூன்றுபேர் இருக்கிறார்கள். மச்சினிகள் இரண்டுபேர். அவர்தான் மூத்தவர்."

அவள் "அவர்" என்று கூறியது காலஞ்சென்ற அவளுடைய கணவனை என்று தங்கமணி உணர்ந்து கொண்டான்.


"அவர் இறக்கும்போது என்ன வயது?" என்று விசாரித்தான்.

"ஐம்பத்திநாலு" என்றாள்.

தங்கமணிக்குத் தூக்கி வாரிப்போட்டது. கண்கொட்டாமல் அவளை விழித்துப் பார்த்தான். பதினெட்டு வயதுப் பெண்ணுக்கு ஐம்பத்திநாலு வயதுப் புருஷனா? கமலாவைவிட அவள் ஆறு வயது சிறியவள். அவள் கணவனோ தன்னைவிட இருபத்தாறு வயது பெரியவன். என்ன அக்கிரமம்!

அவன் மனம் அந்த இளம் பெண்ணுக்காகப் பரிதபித்தது. தன் தகப்பனாரின் ஸ்தானத்தில் இருக்கக் கூடிய வயதான கணவனுடன் அவள் எப்படி வாழ்க்கை நடத்தினாள் என்பதே அவனால் நினைத்துப் பார்க்கக் கூடியதாய் இல்லை. தன் மனத்துடிப்பு அவளுக்குப் புலனாகும் படி பெரு மூச்சு விட்டு, "இரண்டாவது தாரமா, மூன்றாவது தாரமா நீ? ஏன் இந்த மாதிரி உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தார் உன் அப்பா?" என்றான்.

மதுரம் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். பேசும்பொழுது அவள் நாக்குத் தழு தழுத்தது. "அப்பாவுக்கு இஷ்டமே இல்லை. எங்கெங்கேயோ வரன் பார்த்தார். கடைசியில் என் சித்தி இவருக்குத்தான் என்னைக் கொடுகக வேண்டுமென்று பிடிவாதம்



பிடித்தாள். அவர் அவளுக்குப் பிறந்தாத்து உறவு. சித்தி ரொம்பப் பொல்லாதவள். அவளிடம் அப்பாவுக்கு ரொம்பப் பயம். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தார். அவர் கஷ்டத்தைப் பார்த்து நானேதான் கல்யாணத்துக்கு ஒப்புக் கொண்டேன். சித்தியிடம் இருந்து அவஸ்தைப் படுவதை விட யாரையாவது கல்யாணம் பண்ணிக் கொண்டு போய்விட்டால் தேவலை போலிருந்தது எனக்கு. அப்பா மட்டும் என்னை அவருடன் கூட்டி அனுப்பும்போது, தனியாக வைத்துக்கொண்டு, 'பாழுங் கிணற்றில் தள்ளுவது போல் தள்ளி விட்டேனே,' என்று கண்ணீர் விட்டார். பாவம். மறு வருஷமே அவர் செத்துப் போனார்'' என்று தன் துக்கத்தை விழுங்கினாள்.

தான் அவ்வாறு பேசுவது தவறென்று எண்ணியோ என்னமோ திடீரென்று அவள் தங்கமணி காலி செய்து வைத்த டம்ளர்களை எடுத்துக்கொண்டு சட்டென்று அறையை விட்டு வெளியே சென்றாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சுசீலா வந்ததும், "அவர் எப்பொழுது வந்தார்? மைத்துனன் வீட்டிலிருந்து சீக்கிரம் வந்துவிட்டார் போலிருக்கிறதே இன்றைக்கு?'' என்று மதுரத்தைக் கேட்டாள்.

"ஆமாம் அக்கா, மூன்று மணிக்கே வந்து விட்டார்."

"எனக்குச் சொல்லி யனுப்பக் கூடாதோ? வந்திருப்பேனே? இன்றைக்கு அரைநாள் லீவ் போலேயிருக்கிறது. அப்பொழுதே புறப்பட்டேன்; பட்டு 'இரு சித்தி, இரு சித்தி' என்று பிராணனை வாங்கி விட்டாள்."

"சொல்லியனுப்ப இங்கே யார் அக்கா இருக்கிறார்கள்? நான்தான் நீர்மோரும், பானகமும், நேற்றுப் பண்ணின முறுக்கு கொஞ்சமும் கொண்டு போய்க் கொடுத்தேன்."

"அப்பா இருந்தாரோ இல்லையோ?'' என்றாள் சுசீலா.

"இல்லை; அவரும். எங்கேயோ வெளியே போயிருந்தார். இப்பொழுது தான் வந்தார் கொஞ்ச நேரத்திற்கு முன்."

சுசீலா கணவனிடம் சென்று, "பசிக்கிறதா? ஏதாவது டிபன் பண்ணட்டுமா?'' என்று கேட்டாள்.

அப்பொழுது அவன் முகம் ஒரு மாதிரியாய் இருந்ததைத் தங்கமணி கவனிக்கவில்லை. சிரித்துக்கொண்டே, "சேச்சே, ஒன்றும் வேண்டாம். வயிறு திம்மென்று நிறைந்திருக்கிறது'' என்றான்.

"முறுக்கு தின்றீர்களா?"

"ஓ தின்றாயிற்று. மதுரம் பண்ணின முறுக்கா அது? தின்னும்போதே தெரிந்தது. நீ எப்பொழுது பண்ணினாலும் கசந்து வழியும்; எண்ணெய்க் கசப்பு என்பாய். அவள் என்ன, மந்திரம் போட்டாளா என்ன? கம்மென்று ஓட்டலில் பண்ணுகிறது மாதிரி வாசனை அடித்ததே'' என்றான்.

பாவம், உள்ளும் புறமும் ஒன்றாய் நிஷ்களங்கமான உள்ளத்தை உடைய தங்கமணி தன் மனைவியின் மனதில் அதற்குள் பொறாமைத் தீ புகையத் தொடங்கி விட்டதை அறிந்து கொள்ளவில்லை.

(தொடரும்)

சாதுரியக் கதை

உண்மையான மதம்

'' வாணி ''

● அரேபியாவில் ஒரு பணக்கார யூதவர்த்தகன் இருந்தான். அந்த நாட்டை ஆண்டு வந்த பாதுஷாவிற்கு அவன் ஆஸ்தியை எப்படியாவது பறித்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணம்.

பாதுஷா ஒரு நாள் அந்த யூதனைத் தன் சபைக்கு வரவழைத்து, '' எந்த மதம் உண்மையான மதம் ? '' என்று கேட்டான்.

யூதன் '' கிறிஸ்தவ மதமோ, யூத மதமோ தான் உண்மையானது '' என்று கூறினால் முகம்மதிய மதத்தைப் போலி என்று இழித்துக் கூறியதாக அவன்மீது குற்றம் சாட்டுவது ; அப்படி இல்லாமல் தனக்குப் பயந்து முகம்மதிய மதமே உண்மையானது என்று சொன்னால் அவனை முகம்மதியனாக மாறச் சொல்லுவது ; அப்படி அவன் மதம் மாறச் சம்மதியாவிடில் அவனைச் சிரச்சேதம் பண்ணி விடுவது — என்பதாகப் பாதுஷா நிர்மானித்து வைத்திருந்தான்.

அந்தப் புத்திசாலி யூதன் மேற்படி கேள்விக்குப் பின் வருமாறு பதில் அளித்தான் :—

'' ஒரு ஊரில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். அவனிடம் விலை மதிக்க முடியாத ரத்தினக் கல் ஒன்று இருந்தது. தனக்கும் பிள்ளைகளோ மூன்று, கல்லோ ஒன்று, என்ன பண்ணுவது என்று அவன் யோசித்தான்.

ஒரு சிறந்த இரத்தின வியாபாரியிடம் தன்னிடம் இருக்கும் இரத்தினக் கல்லைப் போலவே வேறு இரண்டு போலிக் கற்களை இரகசியமாக வாங்கி வைத்தான்.

தன் அந்திய காலம் நெருங்கிய உடன் ஒவ்வொரு பிள்ளையையும் தனித் தனியே வரவழைத்து ஒவ்வொரு ரத்தினக் கல்லைக் கொடுத்து, ' நான் உன்னிடம்தான் இந்த ரத்தினக் கல்லை ஒப்புவிக்கிறேன். இதை நான் உன்னிடம் கொடுத்திருப்பதாக மற்றவர்களிடம் தெரிவியாதே !' என்று சொல்லி விட்டுத் தனக்குப் பிடித்தமான பிள்ளையிடமே அந்த உண்மையான ரத்தினக் கல்லைக் கொடுத்து விட்டு இறந்து போனான். ஒவ்வொரு பிள்ளையும் தன்னிடம் இருப்பது தான் உண்மையான இரத்தினக் கல் என்று நினைத்து மூவரும் ரொம்பவும் அன்னியோன்யமாக வாழ்ந்து வந்தனர். அதுபோல அவரவர் தங்கள் தங்கள் மதந்தான் உண்மையான மதம் என்று நினைத்துக் கொள்ளலாம். ஆனால், உண்மையான மதம் எது என்பது, மேற்படி பணக்காரனைப்போல், அவைகளை உண்டு பண்ணிய தெய்வத்திற்குத்தான் தெரியும்.''



யூதனின் பதிலைக் கேட்ட பாதுஷா அவனுடைய புத்தி சாதுர்யத்திற்கு மெச்சி நிறையச் சன்மானம் கொடுத்து அனுப்பினான்.

அரட்டைக் கச்சேரி

● '' ஏன் ஸ்வாமி ! உங்களைத்தானே !''

வீட்டுத் திண்ணைத் தூணில் சாய்ந்து கொண்டு வெகு சுவாரஸ்யமாக வெற்றிலைப் பாக்குப் போட்டுக்கொண்டிருந்த வராகசாமி அவர்கள் நிமிர்ந்து பார்த்தார்.

'' ஏன் ஸ்வாமி ! என்ன வேண்டும் ?'' என்று கேட்டார்.

'' ஒன்றுமில்லை, வந்து—'' என்று வந்தவர் ஆரம்பிப்பதற்குள், '' ஏன் ஐயா, ஒன்றுமில்லை என்பதற்காகவா என்னைக் கூப்பிட்டீர் '' என்று இடைமறித்தார் வராகசாமி.

'' இதென்னடா வம்பா யிருக்கிறது '' என்று இருந்தது அந்தப் புது ஆசாமிக்கு. அவர் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, '' கோபாலபுரத்திற்கு இந்தத் தெரு வழியாகவே நேரே போகலாம், இல்லையா ?'' என்று கேட்டார்.

'' ஆஹா ! பேஷாகப் போகலாம்.''

'' இங்கே யிருந்து வழி எப்படி, சற்று சொல்லுங்களேன் !''

'' வழியா ? நேரே போய், வடக்கே திரும்பி, பிறகு மேற்கே திரும்ப வேண்டியது. பிறகு இடது கைப்புறம் திரும்பி கிழக்கே திரும்ப வேண்டியது.''

'' உங்களுக்கு ரொம்பப் புண்யம் '' என்று கூறி விட்டு, புது ஆசாமி நடையைக் கட்டினார். வராகசாமி சொல்லிக் கொடுத்தபடியே சென்று அரை மணி நேரத்துக்குப் பிறகு வராகசாமி வீட்டுக்கே திரும்பவும் வந்து சேர்ந்தார்.

'' என்ன ஸ்வாமி ! விளையாடுகிறீரா, என்ன! கோபாலபுரத்துக்கு வழி கேட்டால் இந்த இடத்துக்கே வழி சொல்லி அனுப்புகிறீரே ?'' என்று கேட்டார்.

'' ஏன் நான் சரியாகத்தானே சொன்னேன் ?'' என்றார் வராகசாமி.

'' சரியாகச் சொன்னீரா ?''

'' ஆம். சரியாகத்தான் சொன்னேன். இதுதான் கோபாலபுரம்.''

'' அட பாவிப் பிராமணா ? ஏது நீர் பெரிய வாயாடியாய் இருக்கிறீரே !''

'' நீர் பெரிய அசட்டுப் பிச்சுவாக இருக்கிறீரே ?''

'' ஓய் ! என் பெயர் அசட்டுப் பிச்சு என்பது உமக்கு எப்படித் தெரிந்தது ?''

'' என் பெயர் வாயாடி வராகசாமி என்பது உமக்கு எப்படித் தெரிந்தது ?''

'' நீர்தான் வாயாடி வராகசாமியா ? அட ராமச்சந்திரா ! உம்மைத் தேடிக்கொண்டு தான், ஐயா, நான் வந்தேன்.''

'' உமது வரவை எதிர் பார்த்துத்தான் நானும் உட்கார்ந்திருக்கிறேன்.''

[வாயாடி வராகசாமியும், அசட்டுப் பிச்சுவும் ஒன்று சேர்ந்தாகி விட்டது. இவர்களின் அரட்டைக் கச்சேரி இனித் தொடர்ந்து நடக்கும்.]



உபயகுசலோபரி

“துமிலன்” நமது துணை ஆசிரியராகச் சேர்ந்த சில காலத்திற்குள், “நாடோடி”யும் நம்மிடம் வந்து சேர்ந்தது பற்றிப் பல நேயர்கள் வாழ்த்து அனுப்பியிருக்கிறார்கள். அவற்றுள் இரண்டை மட்டும் வேறிடத்தில் பிரசுரித்திருக்கிறோம். தமிழில் சிறந்த எழுத்தாளர்கள் தமிழர் பத்திரிகையாகிய “கல்கி”க்கு வராமல் வேறு எங்கேதான் போக முடியும்? — இன்னும் பல சிறந்த தமிழ் எழுத்தாளர்களையும் நன்கு பயன் படுத்திக் கொள்ள முடியாமல் காகித விலையும், கட்டுப்பாடும் தடை செய்வது பற்றித்தான் வருத்தமாயிருக்கிறது.

★

“பார்த்திபன் கனவு” ஆரம்பித்த புதிதில், ஒரு நேயர், “கடைசியில் ஒரு பழைய புராணக் கதையையா ஆரம்பித்தீர்கள்? நல்ல சமூகத் தொடர் கதையாகப் போடக் கூடாதா?” என்று எழுதியிருந்தார். அவர் போன்றவர்களுக்கு இப்போது இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுமென்று நம்புகிறேன். “கல்கி”யில் இப்போது இரண்டு சமூகத் தொடர் கதைகள் வெளி வருகின்றன. ஒன்று, உலகப் பிரசித்திபெற்ற கவியரசர் ரவீந்திரநாத டாகுர் எழுதியது. பூந்தோட்டத்தின் பூமணத்துடன் கலந்து கிளம்பும் ஸுகந்த நவீனம். அழகுக்கு அழகாக, ஸ்ரீ குமாரஸ்வாமியின் ரஸமான மொழிபெயர்ப்பை “மணி”யின் வர்ண சித்திரங்கள் அலங்கரிக்கின்றன. “பார்த்தாலே போதும்; படிக்கவும் வேண்டுமா?” என்கிறார் ஒரு வாசகர்.

இன்னொரு சமூகத் தொடர் கதை நமது இளம் எழுத்தாளர் து. ரா. எழுதியது. உலக வாழ்க்கையையே ஒரு கதையாகவும், காவியமாகவும் பார்க்கிறவர் து. ரா; தெளிந்த நடையும், இலேசான ஹாஸ்யமும் பொருந்தியது அவருடைய எழுத்து. து. ரா. வின் தொடர் கதை ஆரம்பித்த புதிதில் சில நேயர்கள் “என்ன, ஒருமாதிரி, ‘டல்’லாயிருக்கிறதே?” என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களே இப்போது, “விஷயம் இல்லாவிட்டால் து. ரா. தான் எழுதுவாரா? ‘கல்கி’யில்தான் போடுவார்களா?” என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

★

சென்ற இதழில் து. ரா. தொடர் கதைக்கு “வர்மா” போட்டிருக்கும் படத்தைப் பார்த்து விட்டு, ஒரு நண்பர், “அடே! அப்பா! வர்மா அசாத்தியமாயிருக்கிறாரே? இங்கிலீஷ் பத்திரிகைகளில் வரும் படங்களையெல்லாம் தோற்கடித்து விட்டாரே! இன்னும் என்னவெல்லாம் வேலைகள் செய்வாரோ, தெரியவில்லை” என்று அதிசயப்படுகிறார்.

வர்மா இன்னும் என்னவெல்லாம் செய்வாரோ என்பது ஒருபுறமிருக்க, அவர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதைத் தெரியப்படுத்துகிறேன். முக்கியமாக “பார்த்திபன் கனவு” புத்தகத்துக்கு அழகான வர்ணப் படங்கள் போட்டுக் கொண்டிருக்கிறார். புத்தகம் சீக்கிரத்தில் வெளி வருகிறது.

கவிச் சித்திர விளக்கம்

● ஒரு நாள் மாலை, இடைப் பையன்கள் பசுக்களை மேய்ச்சல் புலங்களி லிருந்து ஊருக்கு ஓட்டி வருகிறார்கள். வரும்போது புல்லாங்குழலை வாயில் வைத்து இதமாகப் பாடுகிறார்கள். அந்தக் குழலோசையைக் கேட்டுப் பசுக்கள் தொடர்ந்து வருகின்றன. இந்தப் புல்லாங்குழல் ஓசையானது, நாயகிக்கு, அந்தி நேரத்தை நினைப்பூட்டி விடுகிறது; நாயகன் வரவில்லையே என்ற ஆத்திரத்தையும் தூண்டி விடுகிறது.

நாயகி தனக்குள்ளே சொல்லிக் கொள்கிறாள் :

“சோழன், ஏதோ, நாட்டிலுள்ளவர்களுக்குத் துன்பம் ஏற்படாமல் காக்கிறான் என்கிறார்கள். எனக்கொன்றும் விளங்கவில்லை. துன்பம் செய்கிறதைத் தடுத்தால் அல்லவா, பாதுகாக்கிறான் என்று சொல்லமுடியும்? இந்த இடைச் சிறுவர்களின் புல்லாங்குழலால் எனக்கு ஏற்படும் துன்பத்தை அவனால் நீக்க முடியவில்லையே?”

தெண்ணீர் நறுமலர்த்தார் - தெளிந்த நீர்களில் பூத்த செங்கழுநீர்ப் புஷ்பங்களை மாலையாய்த் தொடுத்து அணிந்த. சென்னிஇளவளவன் - சென்னி என்றும் இளவளவன் என்றும் பாராட்டப்படுகிற சோழன்; வளவன் - சோழன். மன்னகம் காவலனே என்பரால் - உலகத்தைக் காக்கிறான் என்று சொல்லுகிறார்கள். காவானோ - கட்டளை இட்டுத் தடுக்கமாட்டானோ. மாலைக்கண் கோவலர்வாய் வைத்த குழல் - இந்த மாலைப் போதில் இடைச் சிறுவர்கள் வாய் வைத்து ஊதுகின்ற புல்லாங்குழலை.

சித்திரம் : ஏ. வி. ராகவன். [முத்தொள்ளாயிரம் — டி. கே. ஸி. பதிப்பு.]



தெண்ணீர் நறுமலர்த்தார்ச்
சென்னி இளவளவன்,

மண்ணகம் காவலனே
என்பரால், மண்ணகம்

காவலனே ஆனக்கால்க்
காவானோ — மாலைக்கண்

கோவலர்வாய் வைத்த
குழல்.



கவிச் சித்திரம்—16

முத்தொள்ளாயிரம்.



பச்சைக் கிளி

[வி. ஜி.]

ஓர் ஊரில் ஒரு வேடன் இருந்தான். அவன் ஒரு பச்சைக் கிளியை வளர்த்து வந்தான். அந்தக் கிளியை அவன் எவ்வளவு தூரம் நேசித்து வந்தானோ, அவ்வளவு தூரம் அவனைக் கிளியும் நேசித்து வந்தது.

ஒரு சமயம் அவன் கையில் காசு இல்லாமல் ரொம்பவும் கஷ்டப்பட்டான். ஆகவே, அவன் அந்தக் கிளியை அந்த ஊர் ராஜகுமாரியிடம் விற்றுவிட்டான். அது ஆடுவதையும் பாடுவதையும் பேசுவதையும் பார்த்து, ராஜகுமாரியும் அதைச் சந்தோஷத்துடன் வாங்கிக் கொண்டாள். வேடனுக்குக் கொஞ்சம் பணம் கிடைத்தது.

ஒரு நாளும் அந்தக் கிளியை விட்டுப் பிரிந்திராத வேடனுக்கு, அன்று அதை விட்டுப் பிரியவே, அவனுடைய மனது ரொம்பவும் வேதனையடைந்தது. அன்று இரவு அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அந்தக் கிளியும் அவனை விட்டுப் பிரிந்தது முதல், ராஜகுமாரியிடம் சரியாகக் கூடப் பேசவில்லை. அது வேடனை நினைத்துக் கொண்டு வருந்தியது. அன்று இரவு அதற்குப் தூக்கம் பிடிக்கவில்லை.

ஆகவே, மறுநாள் பொழுது விடிந்ததும், அந்தக் கிளி வேடனைத் தேடிக் கொண்டு வந்து விட்டது. அதைப் பார்த்த வேடனுக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சியாய்த்தான் இருந்தது என்றாலும், இன்னொரு பக்கம் வருத்தமாயிருந்தது. ஏனெனில், அது தன்னைப் பணம் கொடுத்து ஆசையுடன் வாங்கிய ராஜகுமாரியை மோசம் செய்து விட்டு வந்துவிட்டதல்லவா?

அந்தக் கிளியைத் தடவிக் கொடுத்துக் கொண்டே வேடன், "நீ இப்படி மோசம் செய்துவிட்டு வந்துவிடலாமா?" என்று கேட்டான்.

"உன்னை ஒரு நிமிஷம்கூட என்னால் பிரிந்திருக்க முடியவில்லையே, என்ன செய்வது?" என்றது கிளி.

அதைக் கேட்ட வேடனும் ஒருவாறு சமாதானமடைந்தான்.

அந்த ஊரிலேயே இருந்தால் ஒரு வேளை ராஜாவின் ஆட்கள் நம்மைத் தேடி வந்து பிடித்துக் கொண்டு போய்த் தண்டித்தாலும் தண்டித்து விடுவார்கள் என்று வேடன் பயந்து அடுத்த ஊருக்குப் போய்விட்டான்.



மீண்டும் ஒரு சமயம் வேடனுக்கு அந்தக் கிளியை விற்க வேண்டிய அவசியம் நேர்ந்தது. எனவே அவன் அந்தப் புதிய ஊர் ராஜகுமாரியிடம்

கிளியைக்] கொண்டு போய் விற்று விட்டான்.

அந்தப் பச்சைக் கிளி பழையபடி வேடனைத் தேடிக் கொண்டு வந்து விட்டது. அதைக் கண்ட வேடன் மிகவும் வருந்தினான். என்றாலும், அதைத் திட்டவோ, விரட்டவோ அவனுக்கு மனம் வரவில்லை.

வேடனும் கிளியும் மூன்றாவது தேசத்துக்குப் போய் அங்கும் அவ்விதமே செய்தார்கள். ஏற்கெனவே இரண்டு ராஜகுமாரிகளை அந்தக் கிளி ஏமாற்றிவிட்டு வந்த விஷயம் எப்படியோ மூன்றாவது ராஜகுமாரிக்குத் தெரிந்துவிட்டது. அவள் அதைப் பற்றித் தன் அப்பாவிடம் சொன்னாள். அதைக் கேட்ட அரசன் கடுங் கோபமடைந்து, "அந்த வேடனைத் தேடிப் பிடித்து வந்து, கழுமரத்தில் ஏற்றிக் கொன்று விடுங்கள்" என்று தன் காவலர்களுக்கு உத்தரவிட்டான்.





வேடன் பிடிபட்டான். அவனைக் கொல்வதற்காக அரண்மனைக் காவலர்கள் கூட்டிக் கொண்டு சென்றபோது, வழியில் "அவன் நிரபராதி; அவனைக் கொல்ல வேண்டாம்!" என்று அசரீரி சொல்லிற்று.

அதைக் கேட்ட காவலர்கள் ஆச்சரியமடைந்து அவனைக் கொண்டு போய் ராஜாவின் முன் நிறுத்தினார்கள். அசரீரி சொன்னதைக் கேள்விப்பட்ட அரசன் அசரீரி சொன்ன இடத்திற்குச் சென்றான்.

அங்கே ஒரு மரக் கிளையில் பச்சைக் கிளி உட்கார்ந்து கொண்டிருந்தது. அது அரசனைப் பார்த்ததும், "அரசே! மன்னிக்க வேண்டும். நாங்கள் இருவரும் குற்றவாளிகளல்ல; எங்கள் இருவரிடையே உள்ள அன்புதான் உண்மையில் குற்றவாளி! அதை நீங்கள் தண்டிக்க முடியுமா?" என்றது.

"ஓஹோ! அசரீரி நீ தானா? — ஆமாம், அவ்வளவு அன்புள்ளவன், உன்னை ஏன் இன்னொருவரிடம் விற்கிறான்?" என்று அரசன் கேட்டான்.

"அரசே! வறுமைதான் காரணம்" என்று சொல்லிக் கொண்டே அந்தப் பச்சைக் கிளி மரக் கிளையைவிட்டு இறங்கி வந்து வேடனின் முதுகின்மீது உட்கார்ந்து கொண்டது.

அதைப் பார்த்த அரசன் சந்தோஷமடைந்து வேடனை விடுதலை செய்தான். அத்துடன் அவனுக்கு நிறையப் பணமும் கொடுத்து அனுப்பினான்.





காலக்ஷேபம்

காரணம்!

கணவன்:—என்டி! பொழுது விடிந்து விடும் சமயமாயிருக்கும் போல் தோன்றுகிறதே!

மனைவி:—அதெப்படித் தெரியும் உங்களுக்கு?

கணவன்:—அடுத்த வீட்டுக் குழந்தை அழுகையை நிறுத்திவிட்டுத் தூங்குகிறுப் போலிருக்கே!

—அமிர்தலிங்கம்.

●

வைத்தியம் யாருக்கு?

சீனு:—உன்னை ஒரு பைத்தியக்கார நாய் கடித்து விட்டதாமே. அதற்கு என்ன வைத்தியம் செய்தாய்?

கோபு:—நாய்க்கு வைத்தியமா? கையிலிருந்த தடியினுல் மண்டையில் ஒரு போடு போட்டேன்.

—வி. வி. கிருஷ்ணன்.

●

அவன் அநுபவம்

மானேஜர் (வேலைக்கு வந்திருப்பவரிடம்):—எங்கள் கம்பெனியின் பாக்கிதாரர்களிடமிருந்து கடிதம் எழுதிப் பணம் வசூலிக்க ஒரு குமாஸ்தா தேவையிருக்கிறது. அதில் உமக்கு முன் அனுபவம் ஏதாவது உண்டா?

வேலைக்கு வந்திருப்பவர்:—நிறைய இருக்கிறது, சார்! நான் காலேஜில் வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது கடிதம் மூலம் என் தகப்பனரிடமிருந்து அடிக்கடி பணம் வரவழைத்து அனுபவம் பெற்றிருக்கிறேன், சார்.

—கு. மூ. சொக்கலிங்கம்.

●

வட்டம்தான்!

ஒரு கடையில் என் நண்பன் ஒரு ரூபாய்க்குச் சில்லறை கேட்டான்.

கடைக்காரன்:— காலணு வட்டம், தெரியுமா?

என் நண்பன்:—இது தெரியாதா ஐயா! காலணு வட்டமென்று எல்லோருக்கும் தெரியுமே?

—ஆர். கே. வேதா பாய்.

வெட்கமில்லை!

பஞ்சாயத்து கோர்ட்டு பிரஸிடெண்டு:—இவ்விடத்தில் மறுபடியும் வந்து நிற்பதற்கு உனக்கு வெட்கமாயில்லை?

குற்றவாளி:—எஜமான்களெல்லாம் சதா இங்கேயே இருக்கும்போது அடியேனுக்கு என்ன வெட்கம்?

—எஸ். என். கிருத்திவாஸன்.

●

அதே மாதிரி!

ஒருவர்:—என் சிநேகிதர் கோபாலய்யர் உங்களிடம் ஒரு ஜோடி வேஷ்டி வாங்கி ஒரு வருஷமாகிறதாம், இன்னும் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னர்......

கடைக்காரர்:—ஆமாம், அந்தப் பணத்தை நீங்கள் கொடுக்க வந்திருக்கிறீர்களா?

ஒருவர்:—இல்லை, அதே மாதிரி நமக்கும் ஒரு ஜோடி வேஷ்டி கொடுக்க முடியுமான்னு கேட்கத்தான் வந்தேன்!

—ஏ. எஸ். ராமச்சந்திரன்.

●

கஷ்டப்பட வேண்டும்!

ராமு:—அப்பா, நீ இன்னும் கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும்.

தகப்பனர்:—முட்டாள்! நானு கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும்?



ராமு:—ஆமாம், நேற்று நீ போட்டுக் கொடுத்த வீட்டுக் கணக்குக்கு வாத்தியார் இருபது மார்க்குத்தான் கொடுத்திருக்கிறர்! —எஸ். பரசுராமன்.




"Original" Inventor



அறிவிப்பு

•

சுபானு ௵ சித்திரை ௴ 1௳ முதல் உலக யுத்தம் காரணமாக பழைய விலைக்குமேல் எங்கள் தயாரிப்பு சாமான்களின் கிரயம் ரூ. 1க்கு அணா 0-4-0 விதம் உயர்த்தப்பட்டிருக்கிற தென்பதை தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

•

T. S. R. & Co.,

Manufacturing Perfumers

KUMBAKONAM.

படித்துப் பார்!

Palni — பழனி ★

[ஆசிரியர் : ஜே. எம். சோமசுந்தரம்; பி. ஏ. பி. எல். பிரசுரம்: ஸ்ரீ தண்டாயுதபாணி தேவஸ்தானம், பழனி.]

தமிழ் நாட்டிலுள்ள முக்கியமான கோவில்களில் "எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்கள்" என்னும் உத்தியோகஸ்தர்கள் கோயில்களின் நிர்வாகம் நன்கு நடைபெறுவதற்காக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த ஆபீஸர்களில் பல ரகங்கள் உண்டு. சிலர் கோயில்களில் வெகணங்களாகிற பேய் பிசாசுகளைப்போலவே இருந்து கொண்டு வருகிற பக்தர்களைப் பயப்படுத்தி விரட்டி அடிப்பார்கள். இவர்களுக்கு நேர் மாருக, அடியார்க் கடியாராய் இருந்து பக்தர்களை அன்புடன் வரவேற்று வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கும் ஸ்ரீ ஜே. எம். சோமசுந்தரம் போன்றவர்களும் உண்டு. ஸ்ரீ ஜே. எம். சோமசுந்தரம் தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் நிர்வாக உத்தியோகஸ்தரா யிருந்தபோது, அந்தக் கோவிலைப்பற்றிச் சிறந்த ஆராய்ச்சியுடன் கூடிய ஒரு நூல் எழுதினர். பழனி தேவஸ்தானத்தில் நிர்வாக உத்தியோகஸ்தரா யிருக்கும்போது, பழனியைப் பற்றி இந்த அரிய புத்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கிறார். இவ்விதமே இவரை ஸ்தலம், ஸ்தலமாக மாற்றிக் கொண்டிருந்தால், தமிழ் நாட்டிலுள்ள எல்லா க்ஷேத்திரங்களைப் பற்றியும் நமக்கு நல்ல ஆராய்ச்சி நூல்கள் கிடைத்து விடும்.

பழனி மலை, கோயில், பட்டணம், பழனி கோயிலின் ஆதினத்திலுள்ள மற்றக் கோயில்கள் — எல்லாவற்றையும் பற்றி அவசியமான எல்லா விவரங்களும் இந்நூலில் கிடைக்கின்றன. பழனி கோயில் கட்டளை ஏற்படுத்தியிருப்பவர்களின் ஜாபிதா, மண்டபப் படிக்காரர்களின் ஜாபிதா, பழனி ஸ்தலத்தைப் பற்றிய பிரபந்தங்களின் அட்டவணை — எல்லாம் இருக்கின்றன. ஒரே ஒரு குறை மட்டும் இருக்கிறது. பழனி பஞ்சாமிர்தம் செய்யும் முறை, அது கிடைக்கும் வழி, சரியான விலை — முதலிய விவரங்கள் கொடுக்கப்படவில்லை! அடுத்த பதிப்பில் இந்தக் குறை நீக்கப்படுமென்று நம்புகிறோம்.

பாலமிர்தம் ★

[ஆசிரியர் : எஸ். எஸ். தேவர் அவர்கள் ; பிரசுரம்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை ; விலை ரூ. 1—4—0.]

மொத்தத்தில் மாடுகளுக்குப் படிக்கத் தெரியாம விருப்பதே நல்லது. ஏனென்றால், மாடுகளுக்குப் படிக்கத் தெரிந்திருந்து இந்தப் புத்தகத்தைப் படிக்குமானல் அவை தமே தெரியாத இறுமாப்பு அடைவதுடன் மனுஷ்யர்களுக்கு அடியோடு பால் கொடுக்க மறுத்துவிடலாம்! பசும்பாலின் குணங்களைக் குறித்து அவ்வளவு சிறப்பாக இவ்வாசிரியர் வர்ணித்திருக்கிறார். அதோடு, பசுவளர்த்தல்-காத்தல், பால் கறத்தல் — சேர்த்தல் முதலியவைகளைப்பற்றி மிகவும் உபயோகமான விஷயங்களைத் தந்திருக்கிறார். பசுமாடு வைத்திருப்பவர்களுக்கும் பால்பண்ணை நடத்துகிறவர்களுக்கும் மிகவும் அவசியமான புத்தகம்.

அரை நிமிஷக் கதை

அதிகாரமில்லை!

"வஸந்தன்"

"இந்தக் கடிதத்தைப் பார்த்தீர்களா? கோபு எழுதியிருக்கிறன்!" என்று சொல்லிக் கொண்டே ஸ்ரீமதி சௌந்தரம் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்தாள். "அவன் இடக்கிருன் மடப் பயல்! அவனுக்கு வேறு என்ன வேலை!" என்று சொல்ல வேண்டுமென்ற தாங்க முடியாத ஆசை உண்டாயிற்று. ஆனால் அவன் ஒன்றுவிட்ட சித்தப்பாவின் பிள்ளையைப் பற்றி அவளுறுக நான் - அவள் கணவன் - சொல்வதற்கு எனக்குச் சொந்தமா சுகிர்தமா?

"அவன் என்ன எழுதியிருக்கிருன் தெரியுமோ, இல்லையோ! இங்கே வந்து நாலு நாள் உங்களோடு இருக்கவேண்டும் என்று ஆசையாக இருக்கிறதாம்" என்றாள். "என்னத்திற்காக? அந்த அசட்டுக்கு நான் தான் ஜோடி என்று பார்த்தானே! எங்கேயாவது ஆற்றில் விழச் சொல்லு. நீயானை என்று ஒன்று இருக்கிறது. அதற்கும் அவனுக்கும் ரொம்பப் பொருத்தமாயிருக்கும்" என்று சொல்வோமா என்று பார்த்தேன். ஆனால் தொண்டையிலிருந்து வேறு என்னவோ வார்த்தைகள் வெளி வந்து கொண்டிருந்தன: "அதற்கென்ன, சௌந்திரம்! பேஷாக வந்து இருக்கட்டும். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. நாலு நாள் என்றால் நாலு நாள்தான். அதற்கு மேல் விருந்தாளியாக அரைக்கால் விநாடி கூட அவன் தங்கக் கூடாது. வீட்டில் சமையற்காரன் கிடையாது பார். அவன் தங்கினால் உனக்குத்தானே கஷ்டம்?" என்றேன்.

கோபு அழுக்குப் பிடித்த பழைய டிரங்குப் பெட்டியுடன், "மாப்பிள்ளை!" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்தான். அவன் சந்தோஷத்தில் என்னைப் பிரேமாலிங்கனம் செய்து விடுவானே என்று பயந்து கொண்டு பின்னுலிருந்த ஊஞ்சலுக்குப் பின்னல் ஒளிந்து தபாய்த்துக் கொண்டேன். அவன் வந்து நாலு நாளாயிற்று.

ஐந்தாவது நாள் அவன் பெட்டியைத் திறந்து சப்தப் படுத்திக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் எனக்கு ஆறுதல் உண்டாயிற்று. ஆனால் அவன் இடுப்பில் ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு வந்தான்.

"மாப்பிள்ளை! இனிமேல் ஒரு அரைக்கால் விநாடிகூட விருந்தாளியாக இருக்கப்போகிற தில்லை. உங்களுக்கு ஒரு சமையற்காரன் இல்லை என்று சொன்னேனோ இல்லையோ! நானே சமையற்காரனாக இருந்து விடுகிறேன்" என்றான்.



"அவனும் வேலை யகப்படாமல் கஷ்டப்படுகிறான். இங்கேயே இருந்து விட்டுப் போகட்டுமே" என்று சொல்லிக் கொண்டே சௌந்திரம் வந்தாள்.

கோபு தன்னைத் தானே சமையற்காரனாக நியமித்துக் கொண்ட பிறகு அதை வேண்டாமென்று சொல்வதற்கு எனக்கு அதிகாரம் ஏது?

ஜாதகச் சண்டை

"தூமிலன்"

★ சண்டிகேசுவர அய்யரும் மார்க்கபந்து அய்யரும் நண்பர்கள் ஆன விதமே அலாதி. அவர்கள் இரண்டு பேரையும் நன்கறிந்த எந்த மூன்றாவது நபரும் "இதோ மிஸ்டர் சண்டிகேசுவரன்! மாஜி மணல் மூட்டை ஸப்ளை கண்டிராக்டர்," "இதோ மிஸ்டர் மார்க்கபந்து! பாங்கில் எண்பதினாயிரத்து ஒன்பது ரூபாய் போட்டிருப்பவர்" என்று அவர்களைப் பரஸ்பரம் கர்நாடக முறையில் அறிமுகப்படுத்தி வைக்கவில்லை.

அவர்கள் நாகரிக முறையில் நண்பர்களானார்கள் என்று சொல்ல வேண்டும்.

ஒரு நாள் இரவு சுமார் பதினொரு மணி இருக்கும். எங்கும் ஒரே கும்மிருட்டாய் இருந்தது. சண்டிகேசுவரன் ஒரு தெருவோடு போய்க் கொண்டிருந்தபோது எதிரே சற்றுத் தூரத்தில் ஏதோ மாடு வருவதுபோல் தோன்றவே, அவர் முன் ஜாக்கிரதையாக "ஹய்! ஹய்" என்று விரட்டிக் கொண்டே போனார். மறு நிமிடம் யாரோ அவர் மீது வந்து மோதிக் கொண்டார். சண்டிகேசுவரனுக்கு மண்டையில் நன்றாக அடிபட்டு விட்டது. அவரைத் தவிர வேறு எந்த மனிதராகவாவது இருந்தால் "ஏங்காணும், உமக்குக் கண், கிண் இருக்கிறதா, இல்லையா?" என்று கேட்டுச் சண்டைக்குப் போயிருப்பார். ஆனால் சண்டிகேசுவரய்யர் ரொம்ப நிதானமாக "ஏன், ஸார்! உங்களுக்கு ஒன்றும் அடிபடவில்லையே! ஏன் இப்படி விளக்குகளை அணைத்துப் பிராணனை வாங்குகிறார்கள்" என்று சொல்லி மற்றவரின் தலையைத் தடவிக் கொடுத்தார். "ஆமாம், ஸார்! இவர்களுக்கு வேறு வேலை இல்லை" என்றார் மார்க்கபந்து. அந்த நிமிஷ முதலே அவர்களுக்குள் பிராண சிநேகிதம் ஆரம்பமாகி விட்டது.

நாளடைவில் இவர்களுடைய குடும்பத்தினரிடையேயும் நெருங்கிய பழக்கமேற்பட்டது. சிவகாமு (மிஸஸ் சண்டிகேசுவரன்) அம்மாளுக்கும் சேது (மிஸஸ் மார்க்கபந்து) அம்மாளுக்கும் எவ்வளவு ஒற்றுமை என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் சொன்னால் போதும். சிவகாமுவுக்கு எப்பொழுது தும்மல் வருகிறதோ அதே சமயத்தில் சேதுவுக்கும் தும்மல் வருமென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

இவர்கள் ஒற்றுமையைப் பற்றி ஊரெல்லாம் ஒரே பேச்சாயிருந்தது. இதனால் திருஷ்டி வந்து விடுமோவென்று பயந்து சிவகாமு அம்மாளும், காமு அம்மாளும் ஒருவருக்கொருவர் தங்களுக்குத்தானே அடிக்கடி 'சுற்றிப் போட்டு'க் கொள்வது வழக்கம்.

சண்டிகேசுவரனுக்கு விமலா என்ற ஒரு பெண்ணும், மார்க்கபந்துவுக்கு மாலதி என்ற ஒரு பெண்ணும் இருந்தார்கள். இரண்டு பெண்களுக்கும் கிட்டத்தட்ட பதினேழு வயது இருக்கும். இவர்களுக்காக இவர்களுடைய தந்தைமார் எத்தனை வரன்கள் பார்த்திருக்கிறார்கள் என்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது. எத்தனையோ முதல்தரமான வரன்கள் எல்லாம் வந்திருக்கின்றன ஒரு வரனை மட்டும் சொல்கிறேன்.

பிள்ளை குடும்பத்துக்கு ஒரே பிள்ளை. அழகில் அவனுக்கு ஈடு அவனேதான். எதிர் ஜாமீன் என்ற பேச்செடுத்தாலே பிள்ளையின் தகப்பனாருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வரும். தாயாருக்கோ காது செவிடு. நாத்தனார் ஒருத்தி கூடக் கிடையாது.

கல்யாணத்துக்காக ஒரு பெண்ணை வைத்துக் கொண்டிருக்கும் பெற்றோர்களின் மனதைக் குளிரச் செய்யும் எல்லா அம்சங்களும் உள்ள திவ்யமான வரன். இருந்தாலும் சண்டிகேசுவரனுக்கோ மார்க்கபந்துவுக்கோ இப்படியிருந்தால் மட்டும் போதாது. ஜாதகம், முழுக்க முழுக்க அவர்கள் இஷ்டப்படி அமைந்திருக்க வேண்டும்.

மேலே சொன்ன வரனின் ஜாதகத்தை விமலாவுக்காகப் பார்த்தார்கள். அதைப் பார்த்த ஜோசியன் "எல்லாம் நன்றாயிருக்கிறது. ஆனால் கல்யாணம் பண்ணின ஐந்தாம் வருஷத்தில் ..." என்று சொல்லி நிறுத்தினான்.

சண்டிகேசுவரய்யர் பயந்து போய், "ஐந்தாம் வருஷத்தில் என்ன?" என்று கேட்டார்.

"தலையைப் பாதிக்கும்" என்றார் ஜோசியர்.

சண்டிகேசுவரய்யர் நிலைகுலைந்து போய் "விஷயத்தைச் சொல்லி விடும்" என்று கெஞ்சினார்.

"பெண் தலையில் பித்த நரை தோன்றும்" என்றார் ஜோசியர்.

"அப்படியானால் இந்த வரன் வேண்டியதில்லை" என்று சண்டிகேசுவரன் சொல்லி விட்டார்.

மார்க்கபந்துவோ ஜோசியத்தில் இதை விட ஒரு படி அதிக நம்பிக்கை



அதே சமயத்தில் சேதுவுக்கும்......

யுள்ளவர். அவருடைய பெண்ணுக்கு பேஷான ஒரு வரனுடைய ஜாதகம் வந்தது. அதைப் பார்த்த ஜோசியர், "எல்லா அம்சங்களும் நன்றாயிருக்கிறது. இந்த ஜாதகனுக்கு இரண்டு பெண்களும் மூன்று பிள்ளைகளும் உண்டாகும். ஆனால் அந்த மூன்றாவது பிள்ளை இருக்கிறானே, அவனுக்கு உத்தியோகம் கிடைப்பது சிரமப்படும்" என்றார்.

"அப்படியானால் அந்த வரன் வேண்டியதில்லை" என்று மார்க்கபந்து கூறி விட்டார்.

இவ்விதம் இரண்டு பேரும் அலசி அலசிப் பார்த்துத் தள்ளிய ஜாதகங்களையெல்லாம் சேர்த்தால் ஒரு பெரிய ஜனன ஜாப்தா தயார் செய்துவிடலாம்.

● ஒரு சமயம் இவர்கள் தங்கள் நண்பர் ஒருவர் வீட்டில் நடந்த விவாகத்துக்குப் போயிருந்தார்கள். அங்கே இவர்களுக்குப் பக்கத்திலமர்ந்திருந்த இரண்டு பேர் விவாக விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கவே அந்தச் சம்பாஷணையைக் கவனித்தார்கள்.

"சாமிநாதய்யர்! இந்த வருஷம் உங்காத்துக் கல்யாணச் சாப்பாடு உண்டோ, இல்லையோ!" என்று ஒருவர் கேட்டார்.

"கல்யாணத்துக்கு என்ன அவசரம்?" என்றார் சாமிநாதய்யர்.

"அவசரம் என்னவா? காலா காலத்தில் பண்ணினால்தான் தேவலை. பையன் என்ன அழகில் குறைவா? படிப்பில் குறைவா? ஜாதகம் ரொம்ப யோக ஜாதகமாமே!"

"ஆமாம்! ஜாதகம் ஒரு தினுசு. மற்ற எந்தப் பெண்ணினுடைய ஜாதகத்துக்கும் சரியாயிருக்குமென்கிறார்கள். ஆனால், எனக்கென்னமோ ஸார், இதிலெல்லாம் நம்பிக்கையில்லை."

இதே தோரணையில் பேச்சு நடந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் பேச்சுக் கொடுத்த ஆசாமி போய்விட்டார். சாமிநாதய்யர் மட்டும் தனியே இருந்தார்.

மேற்படி சம்பாஷணையை அரைகுறையாகக் கேட்டுக் கொண்டிருந்த நண்பர்களிருவர் காதிலும் "எந்தப் பெண் ஜாதகத்துக்கும் சரியாயிருக்குமாம்" என்ற வார்த்தைகள் விழுந்ததும் அவர்கள் நாக்கில் ஜலம் ஊறிற்று! சண்டிகேசுவரய்யர் தம் பெண் ஜாதகம் இருக்கிறதா என்று சட்டைப் பையைப் பார்த்துக் கொண்டார். அதே சமயத்தில் மார்க்கபந்துவும் தமது சட்டைப் பையைக் கவனித்தார். ஏனென்றால் இரண்டு பேரும் தங்கள் குழந்தைகளின் ஜாதகங்களை எப்பொழுதும் கையில் தயாராய் வைத்திருப்பது வழக்கம்.

ஜாதகம் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன அவர்கள் ஒவ்வொருவரும் எப்படியாவது சாமிநாதய்யர் பிள்ளையின் ஜாதகத்தைத் தன் தன் பெண்ணுக்கு வாங்கிப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். நல்ல ஜாதகம் என்றதும் அவர்களுடைய சிநேகிதம் எல்லாம் பறந்து போயிற்று. ஒவ்வொருவரும் மற்றவருக்குத் தெரியாமல் காரியத்தைச் சாதித்துக் கொள்ள விரும்பினார்கள்.

சண்டிகேசுவரன் நண்பரைக் கூப்பிட்டு "இங்கே வாருங்கள் ஒரு சமாசாரம்" என்று தனியே அழைத்துக் கொண்டு போனார். "உங்கள் ஆத்தில் நாற்காலியில் மணிபர்ஸை வைத்து விட்டு வந்து விட்டேன் போலிருக்கிறது. அதில் எழுநூறு ரூபாய்க்கு மேல் பணமிருக்கிறது. யாராவது எடுத்துக் கொண்டு போய்விட்டால் என்ன பண்ணுகிறது? கொஞ்சம் டிரைவரைப் போய் விசாரிக்கச் சொல்கிறேனா?" என்றார்.

"போகச் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு நண்பர் போனார்.

மறு நிமிடம் சண்டிகேசுவரன் சாமிநாதய்யரின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். தன் பெண் ஜாதகத்தைக் கொடுத்து விட்டுப் பதிலுக்கு அவர் பிள்ளையின் ஜாதகம் கேட்க வேண்டு

ச்பது. அதற்குப் பூர்வாங்கமாகப் பகக் கொடுத்துக் கொண்டு வந்து "தங்களுக்கு எந்த ஊரோ?" என்று விசாரித்தார்.

"மன்னமங்தல்!"

"நம்மாத்துப் பெண்" என்று ஆரம்பித்தார். அதற்குள் மார்க்கபந்து வந்து விடவே "மன்னமங்கல் கத்தரிக்காய் ரொம்ப விசேஷம் இல்லையா?" என்றார்.

பெண்ணைப் பற்றிப் பேச ஆரம்பித்தவர் கத்திரிக்காய்ப் பேச்செடுத்ததைக் கேட்டு சாமிநாதய்யர் ஆச்சரியப்பட்டார். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு "ஆமாம்!" என்றார்.

"தூக்கு என்ன விலைக்கு விற்கும்?"

"ஒன்றரை அணு இருக்கும்."

"வெள்ளை ராசியா, சிவப்பு ராசியா?"

சாமிநாதய்யர் தமக்கு வந்த சிரிப்பை மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொள்வதைப் பார்த்த சண்டிகேசுவரன் "இதோ வந்துவிட்டேன், ஒரு அவசர விஷயம்" என்று எழுந்தார். ஆனால் அப்பொழுது நண்பரையும் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனார்.

"என்ன தலை போகிற விஷயம்?" என்று மார்க்கபந்து எரிந்து விழுந்தார்.

"இந்த மனுஷன் நம்பளைப் பரியாசம் பண்ணுகிறாப் போலிருக்கிறது."

"ஏன்? அவர் சிரிப்பை அடக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்துச் சொல்கிறாயா?"

"ஆமாம்! இந்த மாதிரி மனுஷாளோடே சாவகாசமே வைத்துக் கொள்ளக் கூடாது?"

"ஆமாம்! நீ வைத்துக் கொள்ளாதே."

"நீ என்றால் என்ன அர்த்தம்?"

"நான் மாலதிக்கு அவர் பிள்ளை ஜாதகத்தை வாங்கிப் பார்க்கப் போகிறேன்."

"அதென்னமா பார்க்கலாம்? நீ என்ன நினைத்துக் கொள்வாயோ என்றுதானே நான் அவரிடம் கல்யாணப் பேச்சை எடுக்கவில்லை. நீ மட்டும் இப்படி சுயநலமாக நடந்து கொள்ளலாமா?"

"நீ கத்திரிக்காயைப் பற்றி எதற்காகப் பேசினாயென்று எனக்குத் தெரியாதாக்கும்?"

"சரிதான். நிறுத்திக் கொள்ளும்."

கடைசியில் நண்பர்களிருவரும் மனஸ்தாபத்துடன் பிரிந்தார்கள் என்று நான்சொல்ல வேண்டியதில்லை.

● மறுநாள் மாலை ஏழுமணி இருக்கும். சண்டிகேசுவரன் சாமிநாதய்யர் வீட்டுக்குள் நுழைந்தார். அவர் பின் சொல்லப் பட்டு அவருடைய விலாசத்தை விசாரித்தறிந்து கொண்டிருந்தார். உள்ளே நுழையும்போதுதான் மாதி நண்பர் சண்டிகேசுவரன் தெருவில் எங்காவது வருகிறாரா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனார்.

ஆனால் சாமிநாதய்யர் அறைக்குள் நுழைந்தபோது அவர் அடைந்த ஆச்சரியத்துக்கு அளவில்லை. அங்கே சாக்ஷாத் மார்க்கபந்து உட்கார்ந்து கொண்டு கையில் ஒரு ஜாதகத்தை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்!

சண்டிகேசுவரனுக்குத் திரும்பிப் போய்விடலாமா என்று கூடத் தோன்றிற்று. ஆனால் சாமிநாதய்யர் அவரை வரவேற்று உட்காரச் செய்தார்.

"ஒவ்வொருத்தர் கல்யாணம் நிச்சயம் பண்ணுகிறதென்றால் பெரிய ஆர்ப்பாடம் பண்ணுகிறார்களே, நாங்கள் அரை மணி நேரத்தில் நிச்சயம் செய்து விட்டோம்." என்றார் சாமிநாதைய்யர்!

"நிஜமாகவா?" என்றார் சண்டிகேசுவரன்.

"ஆமாம், உங்க சிநேகிதர் பெண் மாலதியை என் பிள்ளை ராமசாமிக்குக் கொடுக்கத் தீர்மானமாகி விட்டது. அடுத்த மாதம் 10ந் தேதி நாள் நன்றாயிருக்காம்" என்றார் சாமிநாதய்யர்.

"ரொம்ப சந்தோஷம்!"

"விமலாவுக்கும் அன்றைக்கே நடத்தி விடலாமே" என்று மார்க்கபந்து சிரித்துக்கொண்டே கூறினர்.

சண்டிகேசுவரனுக்கு வந்த கோபத்தில் "ஓய்!" என்று ஆரம்பித்தார்.

சாமிநாதய்யர் இவர்கள் விஷயங்களையெல்லாம் நன்றாக விசாரித்து வைத்திருந்தாராதலால் சண்டை ஆரம்பிக்க விடாமல் குறுக்கிட்டு, "நம்ம இரண்டாவது பையன் லக்ஷ்மணசாமிக்கு விமலாவைக் கொடுத்துவிடுங்கள்" என்றார்.

"உங்களுக்கு இன்னொரு பையனிருக்கிறாரா!"

"ஆமாம்! ராமசாமியும் லக்ஷ்மணசாமியும் இரட்டைப் பிள்ளைகள். இரண்டு பேருக்கும் கிட்டத் தட்ட ஒரே ஜாதகந்தான்" என்றார்.

சண்டிகேசுவரய்யர் மேல் அங்கவஸ்திரத்தை எடுத்து நாற்காலியில் போட்டுவிட்டு ஆர அமர உட்கார்ந்தார்.

"ஆனால் ஒரு நிபந்தனை" என்றார் சாமிநாதய்யர்.

"என்ன?" என்று சண்டிகேசுவரய்யர் கவலையுடன் கேட்டார்.

"கல்யாணத்தின்போது மன்னமங்கல் கத்திரிக்காய் ரஸவாங்கி போட வேண்டும்!" என்று பதில் வந்தது!

★ 'வாச்மேன்' வீராசாமிக்கு வேலை போயும் எஜமான விசுவாசம் போகவில்லை. அதன் பலனாக அவன் கழுத்துக்கு வெகு சமீபத்தில் கயிறு வந்து தொங்கிற்று ......

எஜமான விசுவாசம்

"கல்கி"

இந்தியாவையும் உலகத்தையுமே ஒரு கலக்குக் கலக்கி விடுகிறேன் என்று சொல்லிக் கொண்டு ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் துரை இந்தியாவுக்கு வந்தாரல்லவா? வந்து, அவர் சொன்னபடியே ஒரு கலக்குக் கலக்கி விட்டுச் சேற்றை வாரிப் பூசிக்கொண்டு திரும்பிப் போனாரல்லவா? அந்தக் கிரிப்ஸ் துரையின் விஜயத்தினால் ஏதாவது உண்மையில் பிரயோஜனம் ஏற்பட்டதா, ஏற்படாவிட்டால் அது யாருடைய குற்றம் — என்பதைப்பற்றி யெல்லாம் அபிப்பிராய பேதம் இருக்கலாம். ஆனால், ஒரு பலன் நிச்சயமாக ஏற்பட்டது என்பதை நான் அறிவேன். கிரிப்ஸ் விஜயத்தின் பலனாகத்தான் 'வாச்மேன்' வீராசாமிக்கு வேலை போயிற்று. வேலை போனதோடு இல்லை; கிட்டத்தட்ட அவன் தூக்கு மேடையில் ஏறும்படி கூட ஆகிவிட்டது!

சென்னை, அரமனைக்காரன் தெருவில் பிரசித்தியாக இருந்த (இப்போது "இருந்த" என்றுதான் சொல்ல வேண்டி யிருக்கிறது, பாவம்!) மோகன் கம்பெனியில் இராக்காவல் வேலை பார்த்தான் வீராசாமி. இந்த வேலையை அவன் சென்ற ஒன்பது வருஷ காலமாகப் பார்த்து வந்தான். இது விஷயம், மேற்படி மோகன் கம்பெனியின் புரொப்ரைட்டர் மிஸ்டர் எம். டி. மோகன் அவர்களைத் தெரிந்தவர்களுக்கெல்லாம் ரொம்பவும் ஆச்சரியத்தை அளித்தது. ஏனெனில், மிஸ்டர் மோகனுடைய சுபாவம் ஒரு மாதிரி யானது. அதாவது, "க்ஷணச்சித்தம், க்ஷணப்பித்தம்" என்பார்களே, அந்தமாதிரி சுபாவம். காலையில் ஒரு சிப்பந்தியைக் கூப்பிட்டுச் "சம்பளத்தைத் தூக்கிப் போட்டிருக்கிறேன்" என்பார். சாயங்காலம் அதே சிப்பந்தியைக் கூப்பிட்டு, "டிஸ்மிஸ்—கணக்குப் பார்த்துச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு போ — பதில் பேசாதே!" என்பார். ஆகவே, அவருடைய ஆபீஸ் சிப்பந்திகள் எல்லாம் அன்றாடம் ஆபீஸுக்கு கிளம்பும்போது 'டிஸ்மிஸ்' உத்தரவு வாங்கிக் கொண்டு திரும்புவதற்குத் தயாராகவே கிளம்புவார்கள். அதோடு, தினசரிப் பத்திரிகைகளில் 'வாண்டட்' பத்தியைப் பார்த்துக்கொண்டும், வேறு வேலைகளுக்கு மனுப்போட்டுக் கொண்டுதான் இருப்பார்கள்.

ஒன்றிரண்டு கிழப் பெருச்சாளிகள் மட்டும் — பிடித்துத் தள்ளினாலும் போகாமல் — உட்கார்ந்திருந்தார்களே தவிர, மற்றப்படி மோகன் கம்பெனியில் "பழையன கழிதலும் புதியன புகுத"லுமாகவே எப்போதும் இருக்கும்.

ஆனால், இவ்விதம் சிப்பந்திகளை மாற்றிக் கொண்டு வந்தால், கம்பெனியின் காரியங்கள் எப்படி ஒழுங்காக நடைபெறுமென்று வாசகர்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்படலாம். அது இயற்கையும் கூடத்தான். ஆனால், மிஸ்டர் மோகனுடைய இயற்கையை வாசகர்கள் நன்றாய்த் தெரிந்து கொள்ளாத தோஷமே அதற்குக் காரணம். மிஸ்டர் மோகன் ஒரு சமயம் என்ன சொன்னாராம், தெரியுமா? கேளுங்கள் :—

"தெருக் கூட்டுகிற விளக்குமாறுகளை இந்த ஆபீஸ் நாற்காலி ஒவ்வொன்றிலும் கொண்டுவந்து உட்கார வைத்து இந்த ஆபீஸை நான் நடத்தி விடுவேன். நீங்கள் ஒருவரும் இங்கே வேண்டாம்! தொலைந்து போங்கள்!" என்றாராம்.

மோகன் கம்பெனியின் பழைய பெருச்சாளி மானேஜர் என்ன செய்தாராம், தெரியுமா? மேற்படி அருமையான மணி வாக்கியங்களைப் பளபளப்பான காகிதத்தில் அழகாக அச்சிட்டுக் கண்ணாடிச் சட்டம் போட்டு ஒவ்வொரு சிப்பந்திக்கும் ஒவ்வொன்று கொடுத்தாராம். கொடுத்து அவரவர்களுடைய வீட்டில் படுக்குமிடத்துக்கு நேரே மாட்டி வைக்கும்படியும், காலையில் எழுந்ததும் அதைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொள்ளும்படியும் சொன்னாராம். "என்னத்துக்காக?" என்று ஒரு சிப்பந்தி கேட்டதற்கு, "அட பாவிகளா! அப்படிச் செய்தால் உங்கள் பிதிர்க்கள் கரையேறுவார்கள். கயா சிராத்தம் பண்ணின பலன் கிடைக்கும்!" என்றாராம்.

சரி, நம்முடைய கதாநாயகன் 'வாச்மேன்' வீராசாமியிடம் வருவோம். அவன் இப்போது

ஒரே சோகக் கடலில் முழுகிக் கிடக்கிறான். அவனுக்கு வேலை போய் ஒரு வாரத்துக்கு மேலாகி விட்டது. வேலை போன விதத்தை நினைக்க நினைக்க அவனுக்கு அழுகையும் ஆத்திரமுமாய் வந்தது.

ஒரு நாள் பிற்பகல் சம்பளம் வாங்குவதற்காக ஆபீஸுக்குப் போனான் வீராசாமி. காஷியர், "மானேஜரிடம் போ!" என்றார். மானேஜர், "வீராசாமி! நேற்று இராத்திரி 10 மணிக்கு எஜமான் இந்தப் பக்கம் வந்தாராம். உன்னைக் காணுமாம். கணக்குத் தீர்த்து அனுப்பிவிடும்படி உத்தரவு!" என்றார். வீராசாமிக்குத் தலையில் ஜப்பான் குண்டு விழுந்தது போலிருந்தது. "ஐயோ! நான் ...." என்று ஆரம்பித்தான். "பேசாதே! போ!" என்று அதட்டினார் மானேஜர். எஜமான விசுவாசமுள்ள வீராசாமி சம்பளம் வாங்கிக் கொள்ளாமல் ஆபீஸ் வாசலில் போய் நின்று காத்திருந்தான். மிஸ்டர் மோஹன் வெளியில் வந்து காரில் ஏறும் சமயத்தில் போய் நின்று, "எசமான்! ......" என்றான். "எசமானாவது? சனியனாவது! டிரைவர், விடு!" என்றார் மோகன். கார் போய்விட்டது.

பிறகு, வீராசாமி மறுபடியும் காஷியரிடம் போய்ப் பாக்கி யிருந்த இரண்டரை மாதத்துச் சம்பளத்தையும் வாங்கிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

2

வீராசாமி அவனுடைய மகளின் வீட்டில் இருந்தான். அவளுக்கு இரண்டு குழந்தைகள். அவர்களிடம் கிழவனுக்கு உயிர். மகளின் புருஷன் குடிகாரன். சம்பாதிக்கிற காசைச் சரியாக வீட்டுக்குக் கொண்டு வருகிறதில்லை. ஆகவே, கிழவனுடைய சம்பளம் குடும்பத்துக்கு ரொம்ப ஒத்தாசையாயிருந்தது. ஐயோ! இதுவொன்று மாதம் 12 ரூபாய் நின்று போய்விட்டதே? காலட்சேபம் எப்படி நடக்கும்? மகள் எங்கேயாவது வீட்டு வேலை செய்யப் போக வேண்டும் போலிருக்கிறதே!



"எப்படியாவது நடந்துவிட்டுப் போவுது? நீ இரவிலே நல்லாப் படுத்துத் தூங்கு!" என்றாள் அருமை மகள். ஆனால், கிழவனுக்குத் தூக்கம் வந்தால்தானே? ஆறு வருஷமாகக் காவல் காத்த மோகன் கம்பெனி ஆபீஸ் கட்டிடம் அவனை 'வா வா' என்று வருந்தி அழைத்துக்கொண்டேயிருந்தது.

ஒரு நாள் இருட்டிய பிற்பாடு வீராசாமி குடிசையில் இருப்புக் கொள்ளாமல் வெளியே கிளம்பினான். வீதியோடு போய்க் கொண்டிருந்தவன், மோகன் கம்பெனி ஆபீஸ் பையன் ஒருவனைப் பார்த்தான். ஏதோ காணாதது கண்டவனைப் போல் ஆர்வத்துடன் அவனைப் பிடித்துக்கொண்டு, "என்டா, முனிசாமி! என்னடா சேதி? ஆபீசெல்லாம் எப்படிடா நடக்குது?" என்றான்.

"ஆபீசு குட்டிச்சுவராப் போச்சு! விடு. நான் போறேன்" என்றான் முனிசாமி.

"அட பாவி! எசமான் சம்பளத்தை வாங்கித் தின்னுட்டு அவருக்கே துரோகம் நினைக்கிற பசங்களா! ......"

"எப்படியோ, தாத்தா! ஓடிப் போனவனுக்கு ஒம்பதாம் மடத்திலே ராசா என்கிறாப்பலே, உன்பாடு தேவலே."

"என்னடா என்பாடு தேவலே?"

"இரண்டரை மாசச் சம்பளம் மொத்தமா வாங்கிக்கிட்டே இல்லையா? எங்களுக்கெல்லாம் காலணா இன்னும் கிடைக்கலே."

"அப்படியா?"

"ஆமாம்; எசமான் பாடு ரொம்ப 'அவுட்' என்கிறாங்க. ஆபீசே குளோசு ஆகிடும் என்கிறாங்க!"

கிழவன் ஏதோ நினைவு வந்தவனாய், "என்டா, முனிசாமி? எனக்குப் பர்த்தியாய் யாராவது வாச்மேன் வந்திருக்கிறானா?" என்று கேட்டான்.

"இல்லே, தாத்தா! நான்கூட ஒரு கிழவனைக் கொண்டு வந்து விட்டேன். 'வாச்மேன்' தேவையில்லை யென்று எசமான் சொல்லிவிட்டாராம்!" — இவ்விதம் சொல்லிக் கொண்டே பையன் கம்பி நீட்டினான்.

வீராசாமியின் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது. வீதியின் முடுக்கில் இருந்த பாலத்தின் மேல் உட்கார்ந்து யோசிக்கத் தொடங்கினான். ஆகா! எசமானுக்குக் கஷ்டம் வந்தவுடனே இந்தத் துரோகிப் பசங்கள் எல்லாரும் எப்படிப் பேசுகிறார்கள், பார்த்தாயா? அடாடா!

ட்டிடத்தில் ராத்திரி காவலே இல்லையாமே? எந்தக் களவாணிப் பயலாவது வந்து சுருட்டைக் கொளுத்திப் போட்டுட்டுப் போனால் என்ன செய்கிறது? குடி முழுகிப் போய் விடுமே?

வீராசாமியின் கால்கள் மோஹன் கம்பெனி ஆபீஸ் வாசலை நோக்கித் தள்ளாடிக் கொண்டே நடந்தன.

3

இப்போது நாம் மிஸ்டர் எம். டி. மோஹனை நேரில் சந்தித்தாக வேண்டும். இராத்திரி இரண்டு மணி ஆனபோதிலும், அவரை இப்போதே பார்த்துவிடுவதுதான் நல்லது. பொழுது விடிந்தால் வேறு அலங்கோலமான நிலைமையில் அவரைப் பார்க்கும்படி நேரிடும்.

நல்ல வேளையாக மிஸ்டர் மோகனும் இன்னும் தூங்கவில்லை. அவருடைய பெரிய பங்களாவின் மேல்மச்சில் முகப்பு அறையில் மேஜையின் பின்னால் உட்கார்ந்திருக்கிறார். வயது சுமார் நாற்பது இருக்கும். பணந் தொந்தி லேசாக விழுந்திருக்கிறது. தட்டையான முகத்தில் ஹிட்லர் மீசை. கிராப்புத் தலை. சுவரில் ஹாட் முதலிய நாகரிக உடைச் சின்னங்கள் காணப்படுகின்றன.

மேஜை மேல் உள்ள காகிதங்களில் ஏதேதோ கூட்டியும் கழித்தும் கணக்குப் பார்க்கிறார். பக்கத்தில் டெலிபோன் இருக்கிறது. அதை அடிக்கடி ஆவலுடன் திரும்பிப் பார்க்கிறார்.

இதையும் அதையும் இருக்கிற இருப்பையும் முகத்தில் பரபரப்பையும் பார்த்தால், மனுஷர் டெலிபோனில் ஏதோ முக்கியமான செய்தியை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

அவர் எதிர்பார்க்கும் செய்தி டெலிபோனில் வருவதற்குள்ளே, மிஸ்டர் மோகனுடைய வாழ்க்கை வரலாற்றைக் கொஞ்சம் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளலாம்.

மிஸ்டர் மோஹன் ஒரு வயதுக் குழந்தையாயிருக்கும்போதே பணம் சேர்க்க ஆரம்பித்து விட்டான் என்று அவனுடைய பெற்றோர்கள் அந்தக் காலத்தில் பெருமைப் படுவதுண்டு. ஒரு சமயம் வீட்டில் ஒரு இரண்டணா வெள்ளி நாணயம் (அப்போது இந்த நாட்டில் சில வெள்ளி நாணயங்களும் இருந்தன) காணாமற் போய்விட்டதாம். தேடு தேடு என்று தேடினார்களாம். கடைசியில் குழந்தையின் வாயைத் திறந்து பார்த்தால், கடைவாயில் இரண்டணாவை அடக்கிக் கொண்டிருந்ததாம்! அதை எடுப்பதற்குள் குழந்தை ரகளை செய்து விட்டதாம்!



இப்பேர்ப்பட்ட மோஹன் காலேஜ் படிப்பு முடிந்ததும், கேவலம் உத்தியோகத்தைத் தேடாமல் தொழில் ஆரம்பித்தான். அவன் ஆரம்பித்த தொழில் ஏஜென்ஸி வியாபாரம்; எந்த ஊரில் எந்த சாமான் தயாராகிறதென்று தெரிந்து கொண்டு, அதற்கு ஏஜென்ஸி எடுத்து, விளம்பரம் பண்ணி, சில்லறைக் கடை வியாபாரிகளுக்கு விநியோகிப்பது. ஓடாத கடிகாரம் முதல், தலை வழுக்கைத் தைலம் வரையில், எத்தனையோ சாமான்களுக்கு மோகன் ஏஜென்ஸி எடுத்தான். இவற்றை விளம்பரம் செய்வதற்காக முதலில் கேட்லாக்குகள், அப்புறம் பஞ்சாங்கங்கள், டைரிகள், கேலண்டர்கள் — இப்படியெல்லாம் பிரசுரம் செய்யத் தொடங்கினான். மோகன் பஞ்சாங்கம் வெகு சீக்கிரத்தில் பிரசித்தியாகி, "வேறு எந்தப் பஞ்சாங்கத்தையும் விட மோகன் பஞ்சாங்கத்தில்தான் அமாவாசையும் தியாஜ்யமும் அதிகம்" என்ற பெயரைப் பெற்று விட்டது! மோகன் கேலண்டர் என்றால், ஜனங்களிடையே அடிதடி உண்டாவது வழக்கமாயிற்று. அவ்வளவு கிராக்கி! "மோகன் டைரியில் மாதத்துக்கு 33 தேதி!" என்ற புகழும் உண்டாயிற்று.

சாதாரணமாய் இம்மாதிரி வியாபாரத்தில், நாலு அணா சாமானுக்கு மூன்றரை ரூபாய்க்குக்கு மேல் லாபம் வைப்பதில்லையாதலால், பணம் வந்து குவியத் தொடங்கியது.

பணம் குவியவும் மிஸ்டர் மோஹன் பணச் செலவுக்கும் வழி ஏற்படுத்திக் கொண்டு வந்தார். கிளப்புகளில் அங்கத்தினரானார்; பார்ட்டிகள் கொடுத்தார். பெரிய இடத்து சிநேகிதங்கள் ஏற்பட்டன; குதிரைப் பந்தயத்துக்கும் போனார்.


ஒரு தடவை கார்ப்பொரேஷன் தேர்தலுக்கு நின்று பிரமாதமான தோல்வியடைந்தார்! மகத்தான வெற்றிகரமாக ஓடிய ஒரு

சமிஞ் டாக்கியில் பங்காளியாகி, போட்ட பணத்தில் பாதியை இழந்தார்! ஜனங்களுக்கோ வர வர ஓடாத கடிகாரங்கள், வழுக்கைத் தைலங்கள், எலெக்டிரிக் ஜீவசக்தி மாத்திரைகள் — இவற்றிலெல்லாம் மோகம் குறைந்து வந்தது.

கடைசியில், மிஸ்டர் மோஹன் தம்முடைய பொருளாதார நிலைமையைக் கவனித்துப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கவனித்துப் பார்த்ததில், "நிலைமை பேபார்ஸூதான்" என்று தெரிந்தது. நிலைமையைச் சீர்திருத்துவதற்கு, சம்பாத்தியத்தை அதிகப் படுத்துவதற்கு, உடனே ஏதாவது பெருமுயற்சி செய்தாக வேண்டும்.

இவ்விதம் நிர்மானித்துக்கொண்டு மிஸ்டர் மோஹன் சுற்றுமுற்றும் பார்த்தார். அவருக்கு ஒரே திகைப்பாய்ப் போய்விட்டது. யுத்த ஆரம்பத்திலிருந்து பலர் பல வகைகளிலும் ஏராளமாய்ப் பணம் பண்ணிக்கொண்டிருப்பதைக் கண்டார். சிலர் மிலிடரி கண்டிராக்டில் பணம் பண்ணினார்கள். சிலர் ஆகாச விமான தளங்கள் கட்டி லட்சாதிபதியானார்கள். ஒருவர் ஊரிலுள்ள ஓட்டைத் தகரங்களையெல்லாம் சேர்த்து வைத்திருந்தார். அவருக்கு அரை லட்சம் ரூபாய் லாபம் கிடைத்தது. பழைய கோணிப் பைகளையெல்லாம் வாங்கினார் ஒருவர். அவர் முக்கால்லட்சம் தட்டினார். இரண்டாயிரம் ரூபாய்க்கு ஒருவர் க்ஷவர பிளேடுகளை வாங்கி வைத்திருந்தார். அவருக்கு இருபதினாயிரம் ரூபாய் லாபம். காகிதம் ஸ்டாக் செய்தவர்கள், எலெக்டிரிக் சாமான் ஸ்டாக் செய்தவர்கள் — இவர்களுடைய லாபத்தையெல்லாம் சொல்ல முடியாது.

இதையெல்லாம் பார்க்கப் பார்க்க மிஸ்டர் மோஹனின் பரபரப்பு அதிகமாயிற்று. இந்தியா கவர்ன்மெண்டார் கோடி கோடியாக நோட்டுகளை அச்சிட்டுத் தள்ளிக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில் நாம் பணம் சம்பாதிக்கா விட்டால், உயிர் வாழ்ந்துதான்



என்ன பிரயோஜனம்? அதற்கு என்ன வழி? எத்தனையோ வழிகள் இருக்கின்றன — அவற்றில் எதைக் கையாளுவது?

ஒரு வழியில் அவருடைய கவனம் சென்றது. அவருடைய கிளப் அங்கத்தினர்களில் ஒருவர் 'ஷேர் மார்க்கெட்' என்று சொல்லப்படும் பங்கு வியாபாரத்தில் மூன்றே மாதத்தில் இருபது லட்சம் ரூபாய் சேர்த்தது அவருக்குத் தெரிந்தது. இதுதான் சரியான வழியென்று நிர்மானித்து, ஷேர் மார்க்கெட்டில் புகுவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினார்.

அதனுடைய தந்திர மந்திரங்களையெல்லாம் படித்தார். "தோலைக் கடித்துத் துருத்தியைக் கடித்துத்தானே வேட்டை நாயாக வேண்டும்?" என்னும் முதுமொழியைப் பின்பற்றி, முதலில் சொற்ப அளவில் பங்குகள் வாங்கி விற்க ஆரம்பித்தார். அதோடு பிரமாதமாக ஒரு அடி அடிப்பதற்கு நல்ல சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்.

அந்த சந்தர்ப்பந்தான் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸின் விஜயத்தின்போது ஏற்பட்டது.

ஷேர் மார்க்கெட்டில் பங்குகளின் விலை உயர்வதும் விழுவதும் பல அதிசய காரணங்களால் ஏற்படுகின்றன. மகாத்மா காந்திக்கும் ஷேர் மார்க்கெட்டுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையல்லவா? ஆனாலும் மகாத்மா சிறைப்பட்டார் என்றால், பங்குகளின் விலை இறங்கும். மகாத்மா விடுதலை அடைந்தாரென்றால், பங்கு விலை ஏறும்!

கிரிப்ஸ் தூது வருகிற செய்தி கிடைத்ததுமே, "சரி, பங்கு மார்க்கெட்டில் விலை ஏறப் போகிறது!" என்று மிஸ்டர் மோஹன் நிர்மானித்துக் கொண்டார். அதில் உண்மையில்லாமற் போகவில்லை. "கிரிப்ஸ் வரவினால் இந்திய அரசியல் பிரச்னை தீரலாம்" என்ற நம்பிக்கை தேசத்தில் உண்டானதுபோல் ஷேர் மார்க்கெட்டிலும் ஏற்பட்டது. பங்குகளின் விலை ஏற்ற முகம் காட்டிற்று.

"கிரிப்ஸ் பறந்து வரப் போகிறார்"— பங்கு விலை இன்னும் சிறிது ஏறிற்று. "கிரிப்ஸ் கிளம்பி விட்டார்"—பங்கு விலை சுரவேகம் அடைந்தது. "கிரிப்ஸ் கராச்சியில் வந்து இறங்கினார்."—நூறு ரூபாய் விலையிலிருந்த சில பங்குகள் நூற்றறுபதுக்கு வந்து விட்டன.

மிஸ்டர் மோஹனுக்கும் பண ஜுரம் அடித்துக் கொண்டிருந்தது. பங்கு வாங்கு

வது — அதை பாங்கியில் அடகு வைத்துக் கடன் வாங்குவது — அந்தப் பணத்தைக் கொண்டு பங்கு வாங்குவது — அதை இன்னொரு பாங்கியில் வைத்துக் கடன் வாங்குவது—இப்படி ஜமாய்த்துக் கொண்டிருந்தார்.

நாளுக்கு நாள் விஷம் ஏறுவது போல் ஏறிக் கொண்டிருந்தது பங்குகளின் விலை.

"கிரிப்ஸுக்கும் காங்கிரஸுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது" என்று ஒரு பொய்ச் செய்தி வந்து, பத்திரிகைகளில் கூடத் தலையங்கம் எழுதி விட்டார்கள் அல்லவா? அன்றைய தினம் மிஸ்டர் மோஹன் வாங்கின பங்குகளை யெல்லாம் விற்றிருந்தால், ஏழரை லட்சம் ரூபாய் லாபம் பண்ணி யிருக்கலாம்.

ஆனால், அந்தோ! "இன்னும் இருபத்து நாலு மணி நேரம் பார்க்கலாம்" என்று இருந்துவிட்டார். அடுத்த இருபத்து நாலு மணி நேரத்திற்குள் "கிரிப்ஸின் படுதோல்வி" "வேஷம் வெளியாயிற்று" என்ற தலைப்புக்களுடன் செய்திகள் வந்து விட்டன.

பங்கு மார்க்கெட் தலை கீழாக உருட்டியடித்துக்கொண்டு விழுந்தது. மிஸ்டர் மோஹன், பாவம்! ...

4

'கிணுகிணு' வென்று டெலிபோன் மணி அடித்தது. மோஹன் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்து நின்று டெலிபோன் ரிஸீவரைக் கையி லெடுத்தார்.

"ஹலோ ......"

"பூக்கடைப் போலீஸ் ஸ்டேஷனு? ஓகோ! என்ன விசேஷம்? ......"

"புகைஞ்சுதா? என் கம்பெனியிலேயா? அப்புறம் ......?"

"பைர் இன்ஜின் வந்து நெருப்பை அணைச்சுட்டுதா? ரொம்ப ..."

"வாச் மேனே கிடையாதே?".

"யார்? வீராசாமியா?"

"கொஞ்சம் கூடச் சேதம் ஆகலேன்னு சொல்றீங்க? ரொம்ப ......"

"யாராவது எஜமானத் துரோகி செய்த வேலையாய்த்தான் இருக்கணும். அவ்வளவு ஏற்பாடாய்த் தீப் பிடிக்கச் செய்திறதுன்னு ......?"

"டிரைவர் இல்லே; காலேயிலே வந்து பார்க்கிறேன். குட் நைட்."

டெலிபோன் ரிஸீவரைப் படீரென்று வைத்தார் மோஹன். மேஜையை நாலு தடவை குத்தினார். அவர் முகத்தில் என்னும்



கொள்ளும் வெடித்தது. உதடுகளும் ஹிட்லர் மீசையும் துடித்தன. கண்களில் பொறி பறந்தது.

பின் வருமாறு தமக்குள்ளே சொல்லிக் கொண்டார்:—

"கிழட்டுப் பிரம்மஹத்தி—சண்டாளன்—துரோகி — இவனை யார் அங்கே போகச் சொன்னது? — அவனைச் சுட்டுப் பொசுக்கிக் கொன்று குழியை வெட்டி மூடினாலும் தோஷமில்லை! — கடைசி பிளானும் இப்படிப் போச்சு! — இனிமேல்?"

அரை மணி நேரம் ஆவேசம் வந்தவர் போல் அங்குமிங்கும் நடந்து, பல்லைக் கடித்து, மேஜையைக் குத்தி, சுவரை உதைத்து — எல்லாம் ஆன பிறகு, மிஸ்டர் மோஹன் மேஜை டிராயரைத் திறந்து அதிலிருந்த கைத் துப்பாக்கியை எடுத்தார். சற்று நேரம் அதைத் தம் மார்புக்கு நேராகப் பிடித்துக் குறி பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர், அதை மேஜை மீது வைத்துவிட்டுப் பேனாவும் காகிதமும் எடுத்து எழுதத் தொடங்கினர்.

பாவம்! அநேகமாய் அவருடைய மனைவி மக்களுக்குக் கடிதமா யிருக்கலாம். அவர்களெல்லாம் 'எவாக்வேஷன்' சமய மாதலால் வெளியூரில் இருந்தார்கள். அவருடைய அந்தரங்கக் கடிதங்களை நாம் பார்ப்பது நியாயமில்லையல்லவா?

* * *

பல பலவென்று கிழக்கு வெளுக்கும் நேரம். மிஸ்டர் மோஹன் கடிதங்களை எழுதி முடித்து இரும்புப்பெட்டியில் வைத்துப் பூட்டினார். திரும்ப மேஜையினருகில் வந்தார்.

"எசமான்!" என்ற சத்தம் திடீரென்று கேட்டதும் வாசற்படிப் பக்கம் திரும்பிப் பார்த்தார்.

'வாச்மேன்' வீராசாமி கூர்க்கம் போல் நின்று கொண்டிருந்தான். பங்களாவின்

வாசல் வராண்டாவில் மச்சப்படி இருந்தபடியால் அதன் வழியாக அவன் பாட்டுக்கு ஏறி வந்திருக்க வேண்டும்.

சற்று நேரம் மிஸ்டர் மோஹன் பிரமித்து நின்றபோது, வீராசாமி சொல்லிக் கொண்டே போனான். "எசமான்! என்னமோ கால வித்தியாசத்திலே எசமான் நம்மை மறந்தாலும், நாம் மறக்கக்கூடாதுன்னு, இராத்திரி நம்ம கம்பெனிக்குப் போனேனுங்க. புத்தி வாச்மேன் இன்னும் வைக்கலேன்னு கேள்விப் பட்டேனுங்க. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் புகைச்சல் நாத்தம் தெரிஞ்சதுங்க. ஜன்னல் வழியாப் புகை வந்ததுங்க. உடனே, போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினேனுங்க. பையர் இன்ஜின் ஒரு நொடியிலே வந்து அணைச்சுட்டுதுங்க. ஒரு சேதமும் இல்லாதே போச்சுங்க......"

மிஸ்டர் மோகன் திடீரென்று பாய்ந்து வந்து வீராசாமியின் கழுத்தை இறுக்கிப் பிடித்தார். "அட பாவி! துரோகி! உன்னைத்தான் டிஸ்மிஸ் பண்ணியாச்சேடா? உன்னை யாருடா வரச்சொன்னது?" என்று சொல்லிக் கொண்டே அவன் முதுகிலும் தலையிலும் போடு போடு என்று போட்டார். அவனுடைய கழுத்தைப் பிடித்து கெட்டித் தள்ளிக் கொண்டே மச்சப்படியண்டை வந்து ஒரு தள்ளுத் தள்ளினார். கிழவன் உருட்டியடித்துக்கொண்டு போய்க் கீழே விழுந்தான்.

வீராசாமி அளவில்லாத திகைப்புடன் எழுந்து உட்கார்ந்து தன்னைச் சமாளித்துக் கொள்ள முயன்றபோது, மேலே, 'டுமீல்' என்ற துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது.

சத்தத்தைக் கேட்டு, தோட்டக் குடிசையில் படுத்திருந்த தோட்டக்காரன், வாசலில் போன பால்காரன், வீட்டுச் சமையற்காரன் எல்லாரும் ஓடி வந்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் போலீஸ்காரர்களும் வந்தார்கள்.

மேலே, மிஸ்டர் மோஹனுடைய உடல், துணியெல்லாம் இரத்தம் தோய்ந்து, தரையில் விழுந்து கிடந்தது. அருகில் அவருடைய கைத்துப்பாக்கியும் கிடந்தது.

மோகனுடைய உடலை வைத்திய பரிசோதனைக்காக ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள்.

வீராசாமியைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் 'லாக்—அப்'பில் அடைத்தார்கள்.

* * *

வட பழனி ஆண்டவனின் புண்ணியத்தில் கிழவன் வீராசாமி அதிக காலம் சிறையில் இருக்கும்படி நேரவில்லை.


ஏனெனில், ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் மிஸ்டர் மோகனுடைய உடம்பில் உயிர் இருக்கிறதென்று கண்டு பிடித்து அவருக்குப் பிழைப்பூட்டி விட்டார்கள். எத்தனையோ பேரை வேலை தீர்ப்பவர்கள் சிலருக்குப் பிழைப்பூட்டவும் வேண்டியதுதானே?

பிழைத்தெழுந்த மோகன் அந்த பலஹீனமான உடல் நிலைமையில் போலீஸ்காரர்களிடம் உள்ளது உள்ளபடி எல்லாவற்றையும் சொல்லி விட்டார்.

அவருக்கு வியாபாரத்தில் பெரு நஷ்டம் வந்து விட்டதென்றும், நிலைமையைச் சமாளிப்பதற்காக ஆபீஸுக்கு அவரே நெருப்பு வைத்து விட்டு பையர் இன்ஷியூரன்ஸ் தொகை — லட்சம் ரூபாய் — வாங்குவதற்கு எண்ணினார் என்றும், அதற்காகவே 'வாச்மேன்' வீராசாமியை டிஸ்மிஸ் பண்ணினாரென்றும், அவனுடைய எதிர்பாராத தலையீட்டினால் நோக்கம் நிறைவேறாமல் போகவே தற்கொலை செய்து கொள்ள முயன்றாரென்றும் அவருடைய வாக்கு மூலத்தின் மூலம் தெரிய வந்தன.

எனவே, வீராசாமி விடுதலையடைந்து அவனுடைய பேரக் குழந்தைகளைப் பார்ப்பதற்கு வீடுவந்து சேர்ந்தான்.

எப்படியும் அவனுடைய எஜமான விசுவாசம் வீண் போகவில்லையென்றே சொல்ல வேண்டும். அவனைத் தூக்கு மேடையிலிருந்து காப்பாற்றுவதற்காகவே மிஸ்டர் மோஹன் குறி பிசகாய்ச் சுட்டுக் கொண்டிருக்கலாமல்லவா?



Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy, at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras